# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.265, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram
Ria MONEY TRANSFER
WESTERN UNION



Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 03.06.2024 திங்கட்கிழமை | இதழ் : 155 | பக்கங்கள் : 12


### ஜனாதிபதித் தேர்தலில்

# தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவதில் ரெலோ உறுதி!

மட்டக்களப்பு, ஜூன் 03

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் என்ற நிலைப் பாடு காலத்தின் தேவை. சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பொது வேட்பாளர் கோரிக்கைக்கு ஆதரவளிப்பதாக நேற்றைய தினம் மட்டக்களப்பில் கூடிய தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைமைக் குழு முடிவு எடுத்துள்ளது.**

மட்டக்களப்பில்ரெலோவின் கட்சி பணிமனையில் நடந்த இந்தக் கூட்டத்தில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் அந்தக் கட்சி விடுத்த ஊடக அறிக்கையில்,

"கடந்த கால எமது அனுபவங்களின் அடிப்படையில் தமிழ் மக்கள் மத்தியில் பொது வேட்பாளர் என்ற நிலைப்பாடு எழுந்துள்ள சூழ்நிலையிலும் காலத்தின் தேவை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் பொது வேட்பாளர் என்ற கோரிக்கைக்கு ஆதரவு நிலைப்பாட்டை எமது கட்சியின் தலைமை குழு எடுத்திருக்கிறது.

"இந்தக் கோரிக்கையானது வெற்றியளிப்பதற்கு தமிழ் தேசிய தரப்பில் இருக்கும் அனைவரும் ஒன்றிணைந்து பொது வேட்பாளரை முன் நிறுத்த வேண்டிய அவசியத்தையும் நாம் வலியு றுத்துகிறோம்.

"அனைத்து தமிழ் தரப்பினர்களையும் ஒருங்கிணைக்கும் தற்போதைய முயற்சிக்கு நமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதாகவும் தீர்மானித்துள்ளோம் - என்றுள்ளது. (ஐ-எ)

# விமர்சிப்பது இலகுவானது தீர்வு காண்பதே கடினம்!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 03

நாட்டின் பொருளாதாரம் ஸ்திரத்தன்மை அடைந்துள்ள நிலையில் மீண்டும் பழமையான அரசியலில் ஈடுபடலாம் என எவரும் எண்ணிவிடக்கூடாது. விமர்சனம் செய்வது இலகுவானது எனினும் தீர்வு வழங்குவது கடினமானது. எனவே, விமர்சனம் செய்து கொண்டிராமல் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு அனைவரும்

11

# புதிய ஆசிரியர்கள் நாளை கடமையை பொறுப்பேற்கலாம்

### வடக்கு கல்வி அமைச்சு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 03

வடக்கு மாகாணத்தில் அண்மையில் நியமனம் பெற்றுக்கொண்ட 374 பட்டதாரி ஆசிரியர்களும் நாளை செவ்வாய்க்கிழமை - 4 ஆம் திகதி தமது கடமைகளை பொறுப்பேற்க முடியும் என மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

புதிய ஆசிரி

11

### தமிழ் பொது வேட்பாளர்:

# தமிழ்த் தேசிய கட்சிகள் பலவும் ஆதரவு தெரிவிப்பு

* பொது வேட்பாளருக்கான நடைமுறை காரணத்தை சுமந்திரனும் ஏற்றார்

வவுனியா, ஜூன் 03

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு வடக்கின் பெரும்பாலான கட்சிகள் ஆதரவு நிலைப்பாட்டை கொண்டுள்ளன - இந்த நிலைப்பாடு பொதுமக்கள் அமைப்புகளின் கூட்டிணைவு மேற்கொண்ட அரசியல் கட்சிகளுடனான சந்திப்பில் தீர்மானிக்கப்பட்டது என்று பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான சிவில் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

பொது வேட்பாளரை தெரிவு செய்வதற்கான சிவில் அமைப்புகள் நேற்று விடுத்த விசேட ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிக்கப்பட்டன. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

ஜனாதிபதித் தேர்தலை, ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து, ஜனாதிபதித் தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களுக்கான

11

### தென்னிலங்கையில் அனர்த்தம்:

# ஒருநாளில் 10 பேர் பலி 5 பேரை காணவில்லை

கொழும்பு, ஜூன் 02

தென்னிலங்கையில் அதிகம் நீடிக்கும் சீரற்ற காலநிலையால் நேற்று மாலை வரையான 24 மணி நேரத்தில் மட்டும் 10 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காணாமல் போயுள்ளனர்.

இந்தத் தகவலை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோன் உறுதிப்படுத்தனார்.

கொழும்பு - அவிசா



வளையில் நால்வர் உயிரிழந்தனர். இதில், ஒரே குடும்பத்தை சேர்ந்த சிறுமி உட்பட மூவர் வெள்ளத்தில் மூழ்கி

11

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி வழங்குக

### மாவட்ட செயலர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக உதவிகளை வழங்குவதற்கு மாவட்ட செயலாளர்களுக்கு நிதியை ஒதுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிதி அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பருவமழை பரவலான பேரழிவை ஏற்படுத்தியதால் வார இறுதியில் 14 பேர் உயிரிழந்தனர். 5 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 19 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாட்டின் 25 மாவட்டங்களில் 20 மாவட்டங்கள் கனமழையால் பாதிக்கப் பட்டுள்ளன என்றும் முக்கிய நதிகளின்

11

# ரணிலிடம் ஆலோசனை பெற்று நாம் அரசியல் செய்யவில்லை!

### சொல்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன் 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் வைத்துக் கொண்டு நாங்கள் எமது வேட்பாளரை அறிவித்தால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும். ஜனாதிபதித் தேர்தல் குறித்து தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி முதலில் அறிவிக்க வேண்டும். ஜனாதிபதியிடம் ஆலோசனை பெற்று நாங்கள் அரசியல் தீர்மானத்தை எடுப்பதில்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றநிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பில் அவர்

11

# பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை!

கொழும்பு, ஜூன் 03

நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் இன்றைய தினம் அரசாங்கம் விடுமுறையை அறிவித்துள்ளது.

நாட்டின் பெரும்பாலான மாவட்டங்கள் சீரற்றகாலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்தில் கொண்டே இன்றைய தினம் பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேநேரம், வடக்கு மாகாண பாடசாலைகளில் தற்போது தவணை பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில் இன்றைய தினம் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டமையால் இன்று திங்கட்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கல்வி திணைக்களம் அறிவித்துள்ளது.

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழா என்று சொல்லப்படும் இந்திய பொதுத் தேர்தல் நடந்து முடிந்துவிட்டது. நாளை காலையில் இருந்து தேர்தல் முடிவுகள் வெளிவரத் தொடங்கும்.

தற்போதைய ஆளும் கட்சியான பாரதிய ஜனதாவும் - பிரதமர் நரேந்திர மோடியும் மீண்டும் ஆட்சிக்கு வருவார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருப்பதாகத் தெரியவில்லை.

தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து நானூறு இடங்களில் வெற்றிபெறமுடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்த பாரதிய ஜனதா கட்சியினர், தமது வெற்றிக்கு மோடி என்ற இரண்டெழுத்தை மாத்திரமே நம்பிக்கொண்டிருந்தனர்.

ஆனால், அந்த நம்பிக்கை முதல் இரண்டு கட்ட வாக்களிப்பின் பின்னர் மாறிப்போனது. மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவடைந்தமை ஆளும் கட்சிக்கு பாதகமாகவே இருக்கும் என்ற பொதுத் "தியறி" பாரதிய ஜனதா கட்சியினரை சிந்திக்க வைத்ததுடன், தமது தேர்தல் பிரசார யுத்தியையும் மாற்றவேண்டும் என்ற கட்டாயத்துக்குத் தள்ளியது.

இதனால், வழக்கமான தமது அரசியலை கையில் எடுத்த பாரதிய ஜனதா கட்சியினர், அதிலும் அதன் ஒரே முகமாக இருந்த பிரதமர் மோடி மதவாதத்தை கையில் எடுத்தார். முஸ்லிம்களுக்கு எதிரான தனது வழக்கமான பிரசாரத்தை தீவிரப்படுத்தத் தொடங்கினார்.

இந்த இடையில்தான் அந்தச் சம்பவம் நடந்தது.

குஜராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் நான்கு இலங்கையர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நால்வரும் முஸ்லிம்கள் என்பதும் அவர்கள் கைதுசெய்யப்பட்டதும், அவர்கள் தங்களை ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்புடன் சம்பந்தப்படுத்தினரென விசாரணைகளில் தெரிவித்தார்கள் என்றதும் இந்தியாவில் முக்கிய செய்திகளாகின.

இந்த நேரத்தில் இதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் நடந்த பொதுத்தேர்தலில் என்ன நடந்தது என்பதைத் திரும்பிப் பார்க்கவேண்டியதாகிறது.

அப்போதும் இப்படித்தான் முதல் சில கட்ட வாக்குப்பதிவுகள் நடந்து முடிந்த பின்னர், இலங்கையில் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்தது. அந்தத் தாக்குதலை ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பு உரிமை கோரியதும், இந்தியாவிலும் அதுபோன்ற தாக்குதல்கள் நடக்கலாம் என்றும் அப்படியெனில், அதனைத் தடுக்கக் கூடிய தலைவர் ஒருவர் ஆட்சியில் இருக்கவேண்டும் என்ற எண்ணமும் இந்தியர்கள் மத்தியில் ஊடகங்களால் விதைக்கப்பட்டது.

அதன் மறைமுக கருத்து மோடி மீண்டும் ஆட்சியில் இருந்தால் மாத்திரமே முஸ்லிம் தீவிரவாதத்தைத் "துடைக்கலாம்" என்று அர்த்தம் கொள்ளப்பட்டது.

அந்தப் பிரசாரமும் கைகொடுத்ததாகவே தேர்தல் முடிவுகள் இருந்தன. அதாவது, ஈஸ்டர் தாக்குதல் நடப்பதற்கு முன்னர் வாக்குப்பதிவு நடைபெற்ற இடங்களில் பாரதிய ஜனதா கட்சிக்கு கிடைத்த வெற்றியிலும் பார்க்க, தாக்குதலுக்கு பின்னர் நடைபெற்ற வாக்குப்பதிவுகளில் பாரதிய ஜனதா கட்சிக்கு கிடைத்த வெற்றிகள் அதிகமாக இருந்தன.

அதாவது, ஈஸ்டர் தாக்குதல் ஒருவகையில் மோடிக்கும் பயனளித்தது. இதுபற்றி முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது, நான்கு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டமையும் அவர்கள் ஐ. எஸ். ஐ. எஸ். தீவிரவாதிகள்தான் என்றும் - அவர்கள் தாக்குதல் ஒன்றுக்காகவே குஜராத் வந்திருந்தனரெனவும் விசாரணைகளில் தெரிவித்தனரென இந்திய ஊடகங்கள் பரபரப்பான செய்திகளை வெளியிட்டன.

இதற்கு சமாந்தரமாகவே, பிரதமர் மோடியும் முஸ்லிம்களுக்கு எதிரான தனது பிரசாரத்தை தீவிரப்படுத்தியிருந்தார்.

இந்தவேளையில்தான் வழக்கம்போல நமது சரத் வீரசேகர, விமல் வீரவன்ஸ வகையறாக்களும் முஸ்லிம்களுக்கு எதிரான தமது பிரசாரங்களை மீண்டும் தீவிரப்படுத்தியிருந்தனர்.

இந்த நேரத்தில்தான், அந்த நால்வரையும் இந்தியாவுக்கு அனுப்பியவர் என்றும் அல்லது அவர்களோடு தொடர்பில் இருந்தவர் எனவும் இலங்கையில் ஒருவர் தேடப்படுகிறாரென செய்திகள் வந்தன. அந்த செய்திகளில் தேடப்பட்டவர் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் அல்ல என்பதும் - இவர்கள் ஏதோ ஒரு தேவைக்காகவே அங்கு அனுப்பப்பட்டனரா என்ற சந்தேகமும் ஏற்பட்டதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்த நால்வரை பற்றியும் விசாரணை நடத்திய இலங்கை அதிகாரிகள் கடைசியாக வெளியிட்ட குறிப்பு நமது கவனத்துக்குரியது.

"இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஐ. எஸ். ஐ. எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் நால்வரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்றும் அவர்கள் மதத் தீவிரவாதிகள் இல்லை" எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இந்தச் செய்தி சொல்லும் தகவல் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒன்று. போதைப்பொருளுக்கு அடிமையான நான்கு முஸ்லிம்களும் இங்கிருந்து யாரோ ஒருவரால் இந்தியாவின் சென்னைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர். அவர்கள் பின்னர் இந்து- முஸ்லிம் மதத்தினரிடையே சர்ச்சைக்குரிய மாநிலமான குஜராத்துக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

அவ்வாறு அனுப்பப்பட்டவர்கள் அங்கு கைது செய்யப்பட்டமையும் தங்களை ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் பிரதானியான சஹ்ரானின் கூட்டாளிகள் என்றும் அந்த அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் அவர்களே கூறினரெனவும் செய்திகள் வெளிவந்தன.

இவை எல்லாவற்றையும் கூட்டிக்கழித்து பார்க்கின்றபோது பல கேள்விகள் நம்முள் எழுவதைத் தவிர்க்கமுடியவில்லை.!

- ஊர்க்குருவி.

# 1, 700 ரூபாய் சம்பளம் வழங்க மறுக்கும் கம்பனிகளின் குத்தகை ஒப்பந்தம் ரத்து

### தொழில் அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்பு



கொழும்பு, ஜூன் 03

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்தம் 1,700 ரூபாய் சம்பள அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மீறிய கம்பனிகளின் குத்தகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழில்துறை அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

குத்தகை ஒப்பந்தங்கள் தொடர்பில் புதிய சட்டங்களைத் தயாரிக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். குறித்த தோட்டங்கள் அரசாங்கத்துக்கு வழங்கப்பட மாட்டாது எனவும் குத்தகை உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டுவந்து புதிய குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் தோட்டங்களை வேறு நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்குமாறும் ஜனாதிபதி, அமைச்சருக்கு வழங்கிய பணிப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் உத்தேசிக்கப்பட்ட சம்பளத்தை வழங்க முடியாது என்றும், தோட்டங்கள் நஷ்டத்தில் இயங்குவதாகவும் தெரிவிக்கப்படுவதற்கான காரணம் முறையான நிர்வாகம் இன்மையேயாகும் எனச் சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, அதற்கமைய புதிய நிறுவனங்களுக்குத் தோட்டங்களை மீள குத்தகைக்கு வழங்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தால் குத்தகை ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும் தோட்டக் கம்பனிகளைக் குத்தகைக்குப் பெறுவதற்கு ஏற்கனவே பல புதிய நிறுவனங்கள் முன்வந்துள்ளதாகவும், ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும் தோட்டங்களை மிகவும் பொருத்தமான நிறுவனங்களுக்கு குத்தகைக்கு வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் மனுஷ நாணயக்கார, ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்குச் சொந்தமான 22 தோட்டங்கள் குத்தகை அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்துடன் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் எதிர்காலத்தில் இரத்துச் செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

(எ)


# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியது

கொழும்பு,ஜூன் 03

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் வெளிச் சுற்றுவட்ட வீதியின் கடுவலை ஊடான பியகம நோக்கிய வீதியின் நுழைவாயில் மூடப்பட்டுள்ளது.

இதன்படி, கடவத்தை நோக்கிச் செல்ல கடுவலை நுழைவாயிலை பயன்படுத்தவோ அல்லது கடவத்தையில் இருந்து வரும் வாகனங்களை கடுவலை நுழைவாயிலை பயன்படுத்தி வெளியேற்றவோ முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

கடும் மழையால் பியகம வீதியின் நுழைவாயில் வெள்ளத்தில் மூழ்கியதன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (எ)



# கொழும்பு - கண்டி வீதியில் நேற்று கடும் வாகன நெரிசல்

கொழும்பு, ஜூன் 03

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் வரக்காபொல நகருக்கு அருகில் மரம் முறிந்து வீழ்ந்ததையடுத்து நேற்றுப் பிற்பகல் முதல் அந்த வீதியூடான போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளது.


வீதியில் விழுந்த மரம் இரு பாதைகளிலும் இடையூறு ஏற்படுத்தியதால், அப்பகுதியில் குறிப்பிடத்தக்க தாமதம் மற்றும் நெரிசல் ஏற்பட்டது.

வீதியின் பாதிக்கப்பட்ட பகுதியைத் தவிர்ப்பதற்கு மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு வாகனச் சாரதிகளுக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ அறிவுறுத்தியுள்ளார்.

"பணியாளர்கள் தடைகளை அகற்றி வழக்கமான போக்குவரத்தை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்," என்றும் அவர் கூறினார்.

(எ)

# கடுவெல - பியகம இடைமாற்ற பிரதேசம் நேற்று மூடப்பட்டது



கொழும்பு, ஜூன் 03

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடுவெல - பியகம இடைமாற்று பிரதேசமும் அறிவித்தலையடுத்து மூடப்பட்டுள்ளது.

வாகனச் சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

(எ)

# ஹோட்டலில் சிக்கி தவித்த 85 பேர் மீட்பு

களுத்துறை, ஜூன் 03

களுத்துறை- ஹொரண ஸ்வக்வத்த பிரதேசத்தில் உள்ள ஹோட்டலில் கடும் மழை வெள்ளத்தில் சிக்கித் தவித்த பல்வேறு வயதுடைய சுமார் 85 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மாவக் ஓயா நிரம்பி வழிவதால், ஹோட்டலில் சிக்கி எதிர்பாராத பிரச்னைக்கு இவர்கள் முகம் கொடுத்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.06.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், வைகாசி 21
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ்த் தேசிய கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் பங்காளி கட்சிகளில் ஒன்றான ரெலோ - தமிழ் பொது வேட்பாளர் தொடர்பான அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிப்பதாகவும் ஏனைய கட்சிகளும் அதனை ஆதரிக்க வேண்டும் என்னும் கோரிக்கையை ரெலோ முன்வைத்திருக்கிறது.

ரெலோவின் நிலைப்பாடு ஏனைய கட்சிகள் தங்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவு தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள கட்சிகள் அனைத்துடனும் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தது. இதன் போது, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை தவிர ஏனைய கட்சிகள் அனைத்தும் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை ரீதியாக ஆதரிப்பதாகத் தெரிவித்திருந்ததுடன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்த கால அவகாசத்தை கோரியிருந்தன.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ரெலோவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு வெளியாகியிருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்பது, அடிப்படையில் ஒரு தமிழ் தேசிய நிலைப்பாடாகும். தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் தங்களின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கு இனியும் தாமதிக்கக்கூடாது.

ஜனாதிபதித் தோதலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்னும் நிலைப்பாடு திடீரென்று உதித்த ஒன்றல்ல - மாறாக, கடந்த பதினைந்து வருடகால அரசியல் அணுகுமுறை தோல்விகளின் விளைவாகும். சம்பந்தன் தலைமையிலான கடந்த பதினைந்து வருடகால அரசியல் அணுகுமுறைகள் குறிப்பிட்டு சொல்லக் கூடிய வெற்றிகளை பதிவு செய்திருந்தால் இவ்வாறானதொரு நிலைப்பாடு தேவைப்பட்டிருக்காது. ஆனால், வெறுமனே தென்னிலங்கையையுடன் இசைந்து செல்வது என்னும் சம்பந்தனின் அணுகுமுறை தமிழர் அரசியலை மிகவும் மோசமான நிலையில் பாதித்திருக்கின்றது.

யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் மேலும் ஐக்கியப்பட்டிருக்க வேண்டிய தமிழினம் மேலும் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. 2010இல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கமாக மட்டுமே திரண்டிருந்த தமிழினம் தற்போது பல கட்சிகளின் பக்கமாக சிதறியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்முரண்பாடுகளுக்குள் சிக்குண்டு சீரழிந்ததே இதற்கான காரணமாகும்.

இவை அனைத்துக்கும், சம்பந்தனின் தூரநோக்கற்ற தலைமைத்துவமே காரணமாகும். இப்போதும்கூட, சம்பந்தன் தவறுகளை புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை அதேபோன்று சம்பந்தனின் அனைத்து அரசியல் அணுகுமுறை தோல்வியிலும் பிரதான பங்காளியாக இருந்த எம். ஏ. சுமந்திரனும்கூட, இப்போதும் கடந்த பதினைந்து வருடகால தங்களின் தவறுகளுக்கு பொறுப்புக்கூறும் மனோநிலையை இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. தவறுகளுக்கு பொறுப்புக்கூறும் தற்துணிவு இருந்திருப்பின் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை பொதுவெளிகளில் எதிர்க்கும் நிலைப்பாட்டை எடுத்திருக்க மாட்டார்கள்.

எனவே, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கை அடிப்படையில் ஆதரிக்கும் அனைத்து கட்சிகளும் தங்களின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும். ஒன்றில் ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ தங்களின் நிலைப்பாடு என்ன என்பதை மக்களுக்கு சொல்ல வேண்டும்.

# பிழையான விடயங்கள் நிலைக்காது

## சொல்கிறார் பிள்ளையான்



மட்டக்களப்பு, ஜூன் 03

நீங்கள் எதனை எரித்தாலும் பிழையான விடயங்கள் நிலைத்திருக்காது என்று யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டதை நினைவு கூர்ந்து இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உரையாற்றியுள்ளார்.

அடுத்த 50 ஆண்டுகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டுபிடிப்புகளும் ஆராய்ச்சியாளர்களையும் உருவாக்கும் இடமாக பொது நூலகம் விளங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பில் அமைக்கப்பட்டுவரும் ஆசியாவின் மிகப் பிரமாண்ட நூலகத்துக்காக நூல்களை சேகரிக்கும் வகையில் புத்தக திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு நூலக புத்தக வள ஒருங்கிணைப்புக்குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மு. பவளகாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சிங்களப் பேரினவாதிகளால் யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்ட சோகமான ஒரு நாள் இன்று. நீங்கள் எதனை எரித்தாலும் பிழையான விடயங்கள் நிலைத்திருக்காது. சரியானவை சரியான இடத்தில் சேரும் என்பதை அப்படியானவர்களுக்கு மட்டக்களப்பு மக்கள் மிகப்பெரும் செய்தியை வழங்கியுள்ளனர். மூன்று இலட்சம் நூல்களுடன்தான் பொது நூலகம் திறக்கப்படும். நாங்கள் திறப்பது புத்தக சாலை. அதனை திறப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

பாடசாலை கல்வியை கற்று மருத்துவராகவும் பொறியியலாளராகவும் வருவது கல்வித்துறையின் அடிப்படை விடயம். கண்டுபிடிப்புகள் புதிய மாற்றங்கள் மூலம் அனைத்தையும் ஒருங்கிணைத்து பேரறிஞர்களை உருவாக்குவதுதான் புத்தகங்களின் பணியாகும். அந்தப் பணிக்கான அத்திபாரத்தையே நாங்கள் இடுகின்றோம். - என்றார். (எ)


# உச்சம் தொடும் களு கங்கையின் நீர் மட்டம்

கொழும்பு, ஜூன் 03

களுகங்கையின் நீர் மட்டம் எல்லகாவ பிரதேசத்தில் 12. 38 மீற்றராக உயர்ந்து பெரும் வெள்ள நிலைமையாக உருவாகியுள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர் மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

களுகங்கையின் கிளை ஆறான குடா கங்கை, மில்லகந்த பகுதியில் தொடர்ந்தும் பெரும் வெள்ளப்பெருக்காக காணப்படுகிறது.



# துப்பாக்கியை மறைத்து வைத்துவிட்டு காணவில்லையென நாடகமாடியவர் கைது!

முல்லைத்தீவு, ஜூன் 03


பணியின் நிமித்தம் வழங்கப்பட்ட கைத் துப்பாக்கியை மறைத்து வைத்து விட்டு காணவில்லை என்று முறைப்பாடு செய்த பொலிஸ் கான்ஸ்டபிளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு - மணலாறு (வெலிஓயா) பொலிஸ் நிலையத்தை சேர்ந்த கான்ஸ்டபிளே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கடந்த 31ஆம் திகதி இவர் தனது கைத் துப்பாக்கியை காணவில்லை என்று பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டுள்ளார்.

எனினும், விசாரணையில் அவர் விகாரை ஒன்றில் துப்பாக்கியை மறைத்து வைத்துவிட்டு நாடகமாடியமை தெரிய வந்தது. அந்தத் துப்பாக்கியை வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்யும் நோக்கில் மறைத்து வைத்திருக்கலாம் என்றும் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, பணி இடைநீக்கம் செய்யப்பட்ட கான்ஸ்டபிள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 03 திங்கட்கிழமை
குரோதி வருடம் - வைகாசி 21
நல்ல நேரம் : 06.30 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : துவாதசி




**மேடம்**

எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். போராடி வெல்லும் நாள்.

**இடபம்**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். உயர் அதிகாரிகள் முக்கியத்துவம் தருவார்கள். வியாபாரத்தில் பழைய வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள்.

**மிதுனம்**

அனுபவ பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகப் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**கடகம்**

கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவார்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உடல்நலம் பாதிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

**கன்னி**

உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. பழைய நண்பர்கள் தேடி வருவார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகார பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக் கட்டும். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**விருட்சிகம்**

புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**மகரம்**

தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கும்பம்**

இதுவரை இருந்த டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் புதிய சரக்குகளை கொள்முதல் செய்வீர்கள். உற்சாகமான நாள்.

**மீனம்**


ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

# தியானத்தை நிறைவு செய்தார் பிரதமர் 3 நாட்கள் உறக்கமின்றி மௌன விரதம்

நாகர்கோவில், ஜூன் 03

கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் 3 நாட்கள் தியானத்தை பிரதமர் மோடி நேற்று முன்தினம் மதியம் நிறைவு செய்தார். கடல் நடுவேயுள்ள திருவள்ளுவர் சிலையை வணங்கிய பின்னர் படகில் கரை திரும்பினார். பின்னர் மாலையில் ஹெலிகொப்டரில் திருவனந்தபுரம் சென்று, அங்கிருந்து விமானத்தில் டில்லி சென்றார்.

இந்தியாவின் தென்முனையில் கடல் நடுவே அமைந்துள்ள கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் பிரதமர் நரேந்திர மோடி கடந்த 30 ஆம் திகதி இரவு தியானத்தை தொடங்கினார். நேற்று முன்தினம் 3 ஆவது நாளாக அவர் தியானத்தில் ஈடுபட்டார்.



இந்த 3 நாட்களும் பிரதமர் மோடி உறங்கவில்லை. அது போன்று, 3 நாட்களும் மௌன விரதத்தை கடைப்பிடித்தார். விவேகானந்தர் மண்டப ஊழியர்கள், பாதுகாவலர்களிடம் சைகையிலேயே பிரதமர் மோடி பேசியுள்ளார்.

தியானத்தை நிறைவு செய்த பின்னர் தியான அறைக்கு அருகேயுள்ள அறையில் சிறிது நேரம் ஓய்வெடுத்தார். பின்னர், வெளியே வந்து விவேகானந்தர் மண்டப படிக்கட்டில் நின்றவாறு கேந்திரா நிர்வாகிகள் மற்றும் ஊழியர்களுடன் படம் எடுத்துக்கொண்டார். (எ)

# அண்ணாமலைக்கு கடலளவு பேராசை

## உதயகுமார் சாடல்

ராமநாதபுரம்,ஜூன் 03

கடுகளவு அனுபவத்தை வைத்துக்கொண்டு, கடலளவு பேராசைப் படுகிறார் பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை என்று முன்னாள் அமைச்சர் ஆர். பி. உதயகுமார் விமர்சித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்ட அ. தி. மு. க. சார்பில் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடும் முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதன் பின்னர் ஆர். பி. உதயகுமார் செய்தியாளர்களிடம் தெரிவித்தவை வருமாறு, பா. ஜ. க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கடுகளவு அனுபவத்தை வைத்துக் கொண்டு, கடலளவு பேராசைப் படுகிறார். பா. ஜ. க. அனுபவம் வாய்ந்த கட்சி என்றாலும், அதன் தமிழகத் தலைவர் அண்ணாமலை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் போன்று செயல்படுகிறார்.

அ. தி. மு. கவின் எதிர்காலத்தைக் கணிக்கும் அதிகாரம் தமிழக மக்களுக்குத்தான் உள்ளது. அண்ணாமலைக்கு அல்ல. எந்தக் கட்சி தமிழக முதல்வராக்கியதோ அதை மறந்துவிட்டு அ. தி. மு. கவையே எதிர்த்து ஓ. பன்னீர்செல்வம் சுயேட்சையாகப் போட்டியிட்டுள்ளார். அவர் போட்டியிட்டுள்ளதை எந்தத் தொண்டரும் ஏற்கவில்லை. இந்தத் தேர்தல் தீர்ப்பு அவருக்கு நல்ல பாடமாக அமையும்- என்றார். (எ)

# தமிழகத்தில் தி. மு. க. கூட்டணி 35 இடங்களில் வெற்றி பெறும்

சென்னை, ஜூன் 03

தமிழகத்தில் தி. மு. க. கூட்டணி 35 இடங்களிலும், பா. ஜ. க. கூட்டணி குறைந்தது ஒன்று அல்லது இரண்டு இடங்களிலும், அ. தி. மு. க. வெள்ளையடிப்பு கூட செய்யப்படலாம் என்றும் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை 4 ஆம் திகதி எண்ணப்படுகிறது. தேசிய அளவில் பா. ஜ. க. கூட்டணி 350 இற்கும் அதிகமான இடங்களிலும், இந்தியா கூட்டணி 130 இற்கும் அதிகமான இடங்களிலும், இதர கட்சிகள் 40 இற்கும் அதிகமான இடங்களிலும் வெற்றி பெறும் சாத்தியக் கூறுகள் உள்ளன என்று தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. (எ)



## ஜூன் 4ஆம் திகதி

# “இந்தியா கூட்டணியின் முடிவு தொடங்குகிறது”

சென்னை,ஜூன் 03

பா. ஜ. கவின் 10 ஆண்டுகால ஆட்சியை வீழ்த்தி இந்தியாவைக் காக்க உருவாக்கப்பட்ட கூட்டணி இந்தியா கூட்டணி என்றவர்கள், இன்றைக்கு மக்களின் எதிர்ப்பை பெற்று வெற்றி கிட்டாது என்ற பதற்றத்தின் முகட்டில் நிற்கிறனர்- இவ்வாறு முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட எக்ஸ் தள பதிவில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பல்லாண்டு காலமாக தன்னை எதிர்க்க யாருமே இல்லை என்ற மமதையில் இயங்கி வந்த காங்கிரஸூக்கு எதிராக பா. ஜ. க. இன்று அசுர பலம் பெற்று வலம் வருகிறது. இடைவிடாத உழைப்பால் பிரதமரும், பா. ஜ. க. கூட்டணி கட்சித் தலைவர்களும் இந்தியா கூட்டணி உருவாக்கிய போலி பிம்பத்தை உடைத்தெறிந்துள்ளனர்.

அந்த வகையில் பா. ஜ. க. கூட்டணியின் வெற்றி எழுதப்பட்டுவிட்டது. அதிகாரபூர்வமாக வெற்றிக் கொண்டாட்டங்களுக்கு இன்னும் ஒரு நாளே உள்ளது.எனவே, வாக்கு எண்ணிக்கையின்போது அதிக விழிப்புணர்வுடன் பா. ஜ. க. கூட்டணி கட்சியினர் இருக்க வேண்டும். ஏனென்றால் நாம் மக்களை ஏமாற்றி அரசியல் செய்யும் கூட்டத்தோடு மோதுகிறோம். ஜூன் 4 ஆம் திகதி இந்தியாவின் விடியல் என்று சொல்லிக் கொண்டிருக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலின் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணியின் முடிவு ஆரம்பமாகும்.

பிரதமர் மோடியின் நிலையான ஆட்சிக்கு 11 ஆம் ஆண்டு வெற்றி தொடக்கமாகவும் அமையும். இந்தியா கூட்டணி வெற்றி பெறாத வெற்றுக் கூட்டணி என்பதை அதன் தலைவர்களே உணர்ந்து விட்டார்கள்.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த மேலும் மூன்று அமைப்புகள் ஆதரவு!

யாழ்ப்பாணம், ஜூன் 03

**ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முடிவுக்கு மேலும் மூன்று அமைப்புகள் பூரண ஆதரவு வழங்கியுள்ளன.**

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், சாவகச்சேரி கூட்டுறவு சபை, யாழ். மாவட்ட பாரவூர்திகள் சங்கம் ஆகிய பொதுஅமைப்புகள் தமது பூரண ஆதரவை வெளிப்படுத்தியுள்ளன.

சிவில் சமூக கூட்டிணைவு செயல்பாட்டாளர்கள் நடத்திவரும் சந்திப்புகளின் தொடர்ச்சியாக குறித்த அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான நேரடி சந்திப்பும் கலந்துரையாடலும் அமைப்புகளின் பணிமனைகளில் நடைபெற்றன.

சாவகச்சேரியிலும், கோண்டாவிலிலும் நடைபெற்ற சந்திப்புகளில் தமிழ் பொது வேட்பாளருக்கு தமது பூரண ஆதரவை வழங்கியுள்ள இந்த அமைப்புகளின் பிரதிநிதிகள் குறித்த விடயம் வெற்றிபெறுவதற்கு தாம் பூரண ஒத்துழைப்புகளை வழங்க தயாராக உள்ளனர் என்றும் சந்திப்பில் கலந்துகொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களிடம் தெரிவித்தனர்.

தேர்தலை புறக்கணியுங்கள்

# பிரசாரத்தை ஆரம்பித்தனர் த. தே. ம. முன்னணியினர்!



யாழ்ப்பாணம், ஜூன் 03

ஜனாதிபதித் தேர்தலை புறக்கணிக்க கோரி தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

ஒற்றையாட்சி அரசமைப்பு நீக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்பு முறைமை உருவாக்கத்துக்கான உத்தரவாதம் வழங்கப்படும்வரை ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் என்று கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்று முன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

# பெண்ணுக்கு தீ மூட்டி எரித்து கொன்ற காதலன்

## யாழ்ப்பாணத்தில் குரூரம்

யாழ்ப்பாணம், ஜூன் 03

குருநகரில் சேமக்கலை ஒன்றில் காதலனால் பெற்றோல் ஊற்றி தீ வைக்கப்பட்ட பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதேநேரம், அவரை தீ மூட்டி எரித்தார் என்று கூறப்படும் 40 வயதான காதலனை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரியை சேர்ந்த இரத்தினவடிவேல் பவானி என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

உயிரிழந்த பெண் ஏற்கனவே திருமணமானவர். அவருக்கு இரண்டு பிள்ளைகளும் உள்ளனர். தனிப்பட்ட பிரச்னை காரணமாக கணவரை அவர் பிரிந்து வாழ்கிறார்.

இந்த நிலையில், வேறு ஒரு நபரை காதலித்து வந்துள்ளார். இருவரும் அந்த சேமக்கலை அருகிலேயே சந்தித்துப் பேசி வருவது வழக்கமாக இருந்துள்ளது.

இந்த நிலையில் பெண்ணுக்கு தீ மூட்டிய காதலனான சந்தேக நபருக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் நிச்சயமாகியுள்ளது. இந்த நிலையிலேயே நேற்று முன்தினம் இருவரும் சந்தித்துப் பேசியுள்ளனர்.

அப்போது, சந்தேகநபர் திடீரென பெண்ணின் மீது பெற்றோலை ஊற்றி தீயிட்டுள்ளார்.

பெண்ணின் அபயக்குரல் கேட்டு அங்கு ஓடி வந்தவர்கள் தீயை அணைத்து அவரை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர், அந்தப் பெண்ணை கொல்லும் நோக்குடன் திட்டமிட்டே வந்தார் என்று விசாரணையில் தெரிய வந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ஊர்காவற்றுறையில் சகோதரிகள் குளத்திலிருந்து சடலங்களாக மீட்பு



யாழ்ப்பாணம், ஜூன் 03

சகோதரிகளான சிறுமிகள் இருவர் சிறுகுளத்திலிருந்து சடலங்களாக மீட்கப்பட்ட சம்பவம் ஊர்காவற்றுறை பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேநேரம், இந்த சம்பவம் குறித்து அறிந்த சிறுமியின் அதிர்ச்சியடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் அறியவருவதாவது,

நிரோசன் விதுசா (வயது 11) நிரஞ்சன் அனுஷ்கா (வயது 5) ஆகிய சிறுமிகளே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை - சின்னமடுவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பால் வாங்குவதற்காக மாலை வேளை 11 வயது சிறுமி தனது தங்கையை ஏற்றிக் கொண்டு சைக்கிளில் சென்றுள்ளார். அப்போது, சிறு குளத்தின் அணைப் பகுதியால் இருவரும் சென்றுள்ளனர். அந்தச் சமயம் நிலைதடுமாறு இருவரும் சைக்கிளுடன் குளத்தில் விழுந்திருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.

நீண்டநேரமாகியும் சிறுமிகள் வராத நிலையில் அவர்களின் உறவினர்கள் இருவரையும் தேடியபோதே சிறுமிகளின் சடலங்கள் மீட்கப்பட்டன. (ஐ)

# பசு வதையை எதிர்த்து அராலியில் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 03

பசு வதைக்கு எதிரப்பு தெரிவித்தும் பசு வதை தடை சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தியும் நேற்று அராலியில் போராட்டம் நடைபெற்றது.

ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன் தலைமையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பசுக்களை கொன்ற இரு கொல்களங்கள் அண்மையில் சீல் வைத்து மூடப்பட்டன. இந்த நிலையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


"இலங்கை சிவபூமி பசுக்களும் எமது தெய்வங்களே, வெட்டாதே வெட்டாதே கன்றுடன் பசுவை வெட்டாதே, கன்றுத்தாச்சி பசுக்களை வெட்டுபவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும். பசுவதை தடைச் சட்டத்தை அமுல்படுத்து, காசாவுக்கு ஒரு நீதி இந்துக்களுக்கு ஒரு நீதியா?" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இந்த போராட்டத்தில் மறவன்புலவு சச்சிதானந்தம், ஊர்காவற்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர் அன்னலிங்கம் அன்னராசா, மாணவர்கள், இளைஞர் - யுவதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# தப்பிச் சென்ற கைதியை கைது செய்ய உதவுங்கள்

## மக்களை கோருகிறது பொலிஸ்



மன்னார், ஜூன் 03

வவுனியா மருத்துவமனையிலிருந்து தப்பிச் சென்ற சிறைச்சாலை கைதியை கைது செய்ய உதவுமாறு மன்னார் பொலிஸார் பொது மக்களை கோரியுள்ளனர்.

தப்பியோடிய கைதி கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி தலைமன்னாரில் 9 வயது சிறுமியை வன்புணர்வு செய்து கொன்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தார்.

வவுனியா சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் நோய் வாய்ப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் திருகோணமலை, குச்சவெளி பிரதேசத்தை சேர்ந்த அப்துல் ரஹ்மான் என்ற நபரொருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

புகைப்படத்திலுள்ள நபர் குறித்து ஏதேனும் தகவல் தெரியும்பட்சத்தில் **071 859 1364** அல்லது 071 859 1370 என்ற தலைமன்னார் பொலிஸ் நிலைய தொலைப்பேசி இலக்கங்களுக்கு அறியத் தருமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எந்த அரசாங்கம் அமைந்தாலும் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க**

கொழும்பு, ஜூன் 03

எந்தவோர் அரசாங்கமும் பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அரசமைப்பு சட்டம் கூறுகிறது. அந்தப் பொறுப்பு தற்போதைய அரசாங்கத்துக்கும் உள்ளது. ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்று துறை, சபாநாயகர் தலைமையிலான சட்டவாக்கத் துறை, பிரதம நீதியரசர் தலைமையிலான நீதித்துறை உள்ளிட்ட 3 துறைகளும் பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியது அவசியமாகும் - என்று கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.



கொழும்பு - ஹோமகமவில் பிக்குகளுக்கான மருத்துவ நிலையம் ஒன்றை திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்த விடயங்களுக்கு ஆதரவளிக்கத் தவறுவது அரசமைப்புக்கு எதிரானதாகும். எம்.பிக்கள் அனைவரும் அரசமைப்பை பின்பற்றுவோம் என உறுதிமொழி எடுத்துள்ளோம். எனவே, இந்த நாட்டில் யுத்தம் இடம்பெற்றிருந்தாலும் இவ்வாறானதொரு கோரிக்கை இது வரை முன்வைக்கப்படவில்லை. அது பற்றிப் பேசப்படவும் இல்லை.

சட்ட ஏற்பாடுகள் பற்றி விவாதிக்கலாம். ஆனால், கோட்பாடுகள் தொடர்பில் விவாதிக்க முடியாது. அரசாங்கம் என்ற வகையில் அதனைப் பின்பற்ற வேண்டும். இதை மாற்ற விரும்புவோர் அரசமைப்பையே மாற்ற வேண்டும் - என்றார். (ஐ)



# பேருந்துகள் மோதி விபத்து ஒருவர் பலி நால்வர் காயம்!

கொழும்பு, ஜூன் 03

களுத்துறை - பாணந்துறை பேருந்து நிலையம் அருகே தனியார் பேருந்தும் இ. போ. ச. பேருந்தும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்த விபத்தில் நால்வர் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் பாணந்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து பாணந்துறை நோக்கி பயணித்த தனியார் பேருந்தும், பாணந்துறை பேருந்து நிலையத்தில் வெளியேற முயன்ற இ. போ. ச. பேருந்தும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் இ. போ. ச. பேருந்தின் நடத்துநரான 35 வயது நபராவார்.

விபத்தின் பின்னர் தனியார் பேருந்தின் சாரதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார். அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்துள்ளனர். (ஐ)



# பேருந்து முச்சக்கரவண்டி விபத்தில் ஒருவர் காயம்!

கொழும்பு, ஜூன் 03

பேருந்தும் முச்சக்கரவண்டியும் மோதிய விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் நில்போவல பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பண்டாரவளை இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து கொஸ்லாந்தையிலிருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்தவேளையில், ஹாலிஎல பகுதியில் இருந்து பண்டாரவளை பக்கமாக சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியுடன் மோதுண்டது.

இந்த விபத்தில் ஹாலிஎல உடுவர பகுதியை சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதி பலத்த காயமடைந்த நிலையில் பதுளை பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

பேருந்தின் அதிக வேகமே விபத்துக்கு காரணம் என்று தெரிவிக்கும் ஹாலிஎல பொலிஸார் பேருந்தின் சாரதியை கைது செய்துள்ளனர். (ஐ)

# தனித்து வேட்பாளரை களமிறக்கும் முடிவை பெரமுன இன்னும் கைவிடவில்லை

கொழும்பு, ஜூன் 03

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து குறைந்தது 20 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணையாதுவிட்டால் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனியான பலமான வேட்பாளரை முன்னிறுத்த தயாராகி வருவதாக அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாத இறுதியில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன மாநாடுகளை நடத்தவுள்ளது. அந்த கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த மாநாட்டில் வேட்பாளர் ஒருவரை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என கூறப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களை அரசாங்கத்துடன் இணைத்துக்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ள நிலையில் குறித்த காலவகாசம் நிறைவடைந்ததன் பின்னர் சிறீ லங்கா பொதுஜன பெரமுன வேட்பாளரை அறிவிக்க தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்வார்கள் என அரசியல் மேடைகளில் பேசப்படுகின்றது.

இதேவேளை, பெரமுனவின் வேட்பாளர்கள் குறித்த கலந்துரையாடல்கள் தொடரும் என சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். (ஐ)

# சீரற்ற காலநிலையால் மின்சாரம் துண்டிப்பு!

கொழும்பு, ஜூன் 03

தற்போது நிலவும் சீரற்ற வானிலை மற்றும் வெள்ளப் பெருக்கு காரணமாக பல பகுதிகளில் மின்சார விநியோகத்தை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட காலி, களுத்துறை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் கேகாலை மாவட்டங்களில் மின்சாரத்தை துண்டிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சுலக்ஷான ஜெயவர்த்தன தெரிவித்தார்.

வெள்ள நிலைமை காரணமாக மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் அப்பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கண்டியில் தொடர் மழை; 700 குடும்பங்கள் பாதிப்பு

கண்டி, ஜூன் 03

மத்திய மலையகத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக கண்டி மாவட்டத்தில் 700 குடும்பங்களை சேர்ந்த 3,200 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட பிரதி பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக மத்திய மலையகத்தில் கடும் மழை பெய்து வருவதால் கண்டி மாவட்டத்திற்கு கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சீரற்ற வானிலை காரணமாக மாவட்டத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார். 650 வீடுகள் சேதமடைந்தன.

மாவட்டத்தில் அரச மற்றும் தனியார் காணிகளில் ஆபத்தான நிலையில் 4 ஆயிரம் மரங்கள் காணப்படுகின்றன. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது - என்றும் மேலும் கூறினார். (ஐ)

# செலவுக்கு நிதி இல்லையாம் வீரர்களை போட்டிக்கு அனுப்பாத அதிகாரிகள்!

கிளிநொச்சி, ஜூன் 03

நிதி இன்மையால் நீர்கொழும்பில் இடம்பெறும் தேசிய போட்டிக்கு அழைத்துச் செல்லப்படாத கிளிநொச்சி வீரர்கள் இருவர் பங்குபற்றும் கடற்கரை கைப்பந்து தேசிய போட்டிக்கு கிளிநொச்சி வீரர்கள் இருவர் அழைத்துச் செல்லப்படாதமை கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது.

கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தைச் சேர்ந்த புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தின் வீரர்களே தேசிய போட்டிக்கு தெரிவாகியும் அழைத்துச் செல்லப்படவில்லை.

இவர்களுக்கான தேசிய போட்டி நீர்கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றது. இந்தப் போட்டிக்கு தெரிவான வீரர்கள் இருவரும் அழைத்துச்செல்லப்படவில்லை.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வினவியபோது, நீர்கொழும்பில் ஒருநாளைக்கு 8 ஆயிரத்து 500 ரூபாய் செலவாகும். அதற்கான நிதி தம்மிடம் இல்லை என்று பதிலளித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பல தரப்பட்டவர்களும் கண்டனங்களை பதிவு செய்து வருகின்றனர். (ஐ)

# வெள்ளத்தில் மூழ்கி காலியில் இருவர் மாயம்!

கொழும்பு, ஜூன் 03

காலி - தவலம பிரதேசத்தில் வெள்ளத்தில் மூழ்கி இருவர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

காணாமல் போயுள்ள இருவரும் ஆண்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களைத் தேடும் விசேட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கையில் சீரற்ற காலநிலை:

# அனர்த்தங்களில் சிக்கி 6 பேர் மரணம் மண்சரிவு, வெள்ள அபாய எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 03

**தென்னிலங்கையில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் 6 பேர் உயிரிழந்தனர். வெள்ளம், மண்சரிவால் இவர்கள் உயிரிழந்தனர். இதேநேரம், தென்னிலங்கையில் பல பிரதேசங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.**

இதேசமயம், நேற்று காலை வரை இரத்தினபுரி எஹலிய கொடவில் 427.5 மி. மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேல், சப்ரகமுவ மாகாணங்கள், காலி - மாத்தறை மாவட்டங்களே வெள்ளத்தால் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதேநேரம், களனி, களு, கிங், நில்வள கங்கைகள் பெருக்கெடுத்து ஓடும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால், தாழ்நில பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில், இரத்தினபுரி நகரம், பாலமடுல்ல, நிவித்திகல, குருவிட்ட, அயகம, அலபாத்த பிரதேசங்களுக்கும் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய, ஹொரணை, தொடங்கொடை, மில்லனிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் ஏற்படக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நிலவும் மோசமான வானிலை காரணமாக 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் பாதுக்கை பிரதேச செயலர் பிரிவு, களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்களில் 12 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கேகாலை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் உள்ள 41 பிரதேச செயலர் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஹரீஸின் பாராளுமன்ற உரைக்கு பலஸ்தீன தூதரகம் அதிருப்பதி!

கொழும்பு, ஜூன் 03

காசா விவகாரம் தொடர்பாக அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் ஆற்றிய உரை தொடர்பில் தனது அதிருப்தியை கடிதம் மூலம் வெளிப்படுத்தியுள்ளது பலஸ்தீன தூதரகம்.

ஹரீஸ் எம். பி. பிரதிநிதித்துவம் செய்யும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைக்கு எழுதிய கடிதத்திலேயே தூதரகம் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளது.

அண்மையில் பாராளுமன்றில் உரையாற்றிய ஹரீஸ் எம். பி. பலஸ்தீனத்தின் எல்லை நாடான எகிப்து உதவுவதில்லை என்று சாடியிருந்தார்.

இது தொடர்பில், அந்தத் தூதரகம் வெளியிட்ட கடிதத்தில், ஹரீஸ் எம். பியின் கருத்தால் எமது தூதுவராலயம் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. பலஸ் தீன விடயத்தில் எகிப்து சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் தேவையான எல்லா வழிகளிலும் பல உதவிகளை தொடர்ச்சியாக வழங்கி வருகின்றது.

பலஸ்தீனின் எல்லைகளை லெபனான், சிரியா, ஜோர்தான் மற்றும் எகிப்து ஆகிய நான்கு அரபு நாடுகள் பகிர்ந்து கொள்கின்றன. இவற்றில் ஜோர்தான் மற்றும் எகிப்து ஆகியன பலஸ்தீனுக்கான நேரடி நுழைவாயிலை கொண்டுள்ளன.

இதனால் காசா மக்களை தமது நாடுகளுக்குள் அனுமதிக்குமாறு இஸ்ரேல் இந்த இரு நாடுகளுக்கும் கடுமையான அழுத்தங்களை வழங்கி வருகிறது. தாக்குதல்கள் மூலமாக காசா மக்களை இந்த இரு நாடுகளுக்கும் அனுப்பி விட்டு காசாவை முழுமையாக கைப்பற்றுவதே இஸ்ரேலின் திட்டமாகும்.

எனினும் இதற்கு எகிப்தும் ஜோர்தானும் ஒத்துழைக்கவில்லை. பலஸ்தீன அதிகார சபை மற்றும் ஹமாஸ் போன்ற இயக்கங்களும் பலஸ்தீனத்துக்கு எகிப்து வழங்கி வரும் ஆதரவுக்கு எப்போதும் தமது நன்றியை வெளிப்படுத்தி வருகின்றன. இவ்வாறான விடயங்களை அறியாமல் உயர் சபையான பாராளுமன்றத்தில் உரையாற்றுவதன் மூலம் எகிப்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக நாம் கருதுகிறோம்.

இவ்வாறான உரைகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் காஸா விடயத்தில் சர்வதேசத்தை பிழையாக வழிநடத்தலாம். இதனால், தங்களது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் உரை தொடர்பில் மறுபரிசீலனை செய்யுமாறும் இதன் மூலம் பலஸ்தீனுடனான எகிப்தின் உறவில் பாதிப்புகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துமாறும் வலியுறுத்துகிறோம் -என்றுள்ளது. (ஐ)

## அஸ்வெசும உதவி திட்டம் வழங்கல்! ஜூலை முதல் 24 இலட்சம் பேருக்கு!

கொழும்பு, மே 03

அஸ்வெசும இரண்டாம் கட்ட நிவாரண திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் முதல் 24 இலட்சம் குடும்பங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை அஸ்வெசும நிவாரணம் கோரி விண்ணப்பிக்க முடியாதவர்களுக்கு இன்னும் வாய்ப்பு இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எப்பாவளையில் அமைந்துள்ள லங்கா அரச பொஸ்பேட் நிறுவனத்தின் கண்காணிப்பு சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்வெசும இரண்டாம் கட்ட நிவாரண திட்டத்தில் 20 இலட்சம் குடும்பங்கள் காப்புறுதி பலன்களைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்கள் என்பது விசேட அம்சம் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, முதல் சுற்றில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## மாலைதீவு அமைச்சர் இன்று வருகின்றார்!

கொழும்பு, ஜூன் 03

மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூஸா சமீர் இன்று திங்கட்கிழமை இலங்கை வருகிறார்.

மூன்றுநாள் பயணமாக இலங்கை வரும் அவர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்துப் பேசுவார் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மூஸா சமீர் உள்ளிட்ட இராஜதந்திரிகள் குழு, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ இரு தரப்பு கலந்துரையாடலிலும் ஈடுபடுவார். (ஐ)

## ரயிலின் பாதையில் பயணித்த பேருந்து!



கொழும்பு, ஜூன் 03

தனியார் பேருந்து ஒன்று புகையிரதத் தண்டவாளத்தில் ஆபத்தான முறையில் பயணிகளை ஏற்றிச் செல்லும் காணொலி தற்போது சமூக வலைதளங்களில் பரவி வருகிறது.

அந்தத் தனியார் பேருந்தின் சாரதி கொழும்பு புறநகரான அவிசாவளை பகுதியில் உள்ள புகையிரத பாதையில் பேருந்தை செலுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

எம்பிலிப்பிட்டிய - கொழும்பு வழித்தடத்தில் இயங்கும் அந்தப் பேருந்தின் சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பலரும் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

## பூஸாவில் எஸ். ரி. எவ். சோதனை!



கொழும்பு, ஜூன் 03

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் விசேட அதிரடிப்படை (எஸ். எரி. எவ்) அதிகாரிகள் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த சோதனை நடவடிக்கையின் போது மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கைபேசிகள் உட்பட பல தடை செய்யப்பட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

பூஸா உயர் பாதுகாப்பு சிறைச்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் சுமார் இரண்டு மணி நேரம் இந்த சோதனை நடவடிக்கை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவின் "இனப்படுகொலை" குற்றச்சாட்டு தீவிர கரிசனையை வெளியிட்டது இலங்கை!

கொழும்பு, ஜூன் 03

அண்மைய சில வருடங்களாக கனடிய அரசியல் பிரதிநிதிகளால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுவரும் "இனப்படுகொலை" குற்றச்சாட்டு தொடர்பில் கனடாவிடம் இலங்கை அதன் தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

இலங்கை வந்த கனடாவின் சர்வதேச அபிவிருத்தி தொடர்பான பிரதி அமைச்சர் கிறிஸ்தோபர் மக்லெனன் - வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜயவர்தன ஆகியோரின் சந்திப்பிலேயே இந்தக் கரிசனையை இலங்கை வெளிப்படுத்தியது.

இதன்போது பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்து கொள்வதில் இலங்கை அடைந்திருக்கும் முன்னேற்றம் குறித்தும் - வருமானத்தையும் - வளர்ச்சியையும் ஈட்டக்கூடிய வகையில் பொருளாதார இராஜதந்திர நடைமுறைக்கு வழங்கப்பட்டிருக்கும் முக்கியத்துவம் குறித்தும் வெளிவிவகார செயலாளர் கனடிய பிரதி அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

அதுமாத்திரமன்றி இம்முயற்சிகள் அனைத்தும் நிலையான சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதை முன்னிறுத்தி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகளுக்கு சமாந்தரமாகவே முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை அண்மைய சில வருடங்களாக கனடாவின் அரசியல் சார்ந்த உயர்மட்டத்தரப்பினரால் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்டுவரும் பொய்யான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தாம் வெகுவாக அதிருப்தியடைவதாகவும் அருணி கனடா அமைச்சரிடம் கூறினார். அத்தோடு கனடா இலங்கையுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை முன்னெடுக்கவேண்டும் எனவும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்பு செய்யவேண்டும் என்றும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீலக்கொடி கடற்கரை திட்டத்தில் பாசிக்குடா

## அமைச்சர் பிரசன்ன தகவல்

ஏறாவூர், ஜூன் 03

**மட்டக்களப்பு - பாசிக்குடா உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த இலங்கையிலுள்ள 28 கடற்கரைப் பகுதிகளை நீலக்கொடி கடற்கரைப் பகுதிகளாக மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



இதன் முதற்கட்டமாக உனவட்டுன, பெந்தோட்டை, பாசிக்குடா மற்றும் அறுகம்பே ஆகிய கரையோரப் பகுதிகளில் நீலக்கொடி திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. சுற்றுலா அமைச்சின் ஆலோசனையின் பேரில் இந்தக் கடற்கரைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அறுகம்பே மற்றும் பாசிக்குடா நீலக் கொடி கடற்கரை பகுதித் திட்டத்துக்காக சுற்றுலா அமைச்சு ஏற்கனவே 32 மில்லியன் ரூபாயை ஒதுக்கியுள்ளது. மாவட்ட செயலாளர்களுக்கு உரிய பணம் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் கடல் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகார சபை, பாசிக்குடா கடற்கரையை இந்த ஆண்டு இறுதிக்குள் நீலக்கொடி கடற்கரையாக மாற்ற முடியும் என்றும் கூறியுள்ளது.

இலங்கையின் தேர்ந்தெடுக்கப்பட்ட கரையோர வலயங்களில் நீலக்கொடி கடற்கரைகளின் அளவுகோல்களை பூர்த்தி செய்வதன் மூலம் சுற்றுலாப் பயணிகளின் ஈர்ப்பை அதிகரிக்கவும், அதன் மூலம் அந்த வலயங்களில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான வசதிகளை வழங்கவும், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதன் மூலம் சுற்றுலாத் துறையின் வளர்ச்சியுடன் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும்.

கடற்கரைப் பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாப்பதற்கு மற்றும் அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக செயல்படுத்தப்படுகின்ற நீலக்கொடி கடற்கரை சான்று வழங்கும் திட்டம் ஒன்றைச் சுற்றுச் சூழலை உலகிலுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கிடையில் பிரபல்யமான சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான ஒரு வகையாகும். நீலக் கொடி சான்றிதழ் கிடைப்பது தரமான தண்ணீர், சூழல் முகாமை, சூழல் கற்றல் தகவல்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பு எனும் 4 தலைப்புகளின் கீழ் 32 நியமங்களைப் பூர்த்தி செய்த கடற்கரைகளாகும். கடற்கரை மற்றும் கடல் சூழல் பாதுகாப்பைப் பேணியபடி மாசடைதல் இல்லாமல் அந்த இடத்தை வைத்திருப்பதன் மூலமாக சுற்றுலாத் துறை மற்றும் மீன்பிடி போன்ற துறைகளில் நிலைபேறான தன்மையைப் பாதுகாக்க முடியும் என்பது இந்த நீலக்கொடி திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். - என்றார். (எ)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்து

## 18 வயது இளைஞன் ஸ்தலத்தில் பலி!



களுவாஞ்சிக்குடி , ஜூன் 03

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரம் இருந்த மின்கம்பத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன் மற்றுமொரு இளைஞன் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியிலுள்ள குருக்கள் மடம் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஸ்தலத்திலேயே 18 வயது இளைஞன் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த இளைஞன் களுதாவளைப் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

காயமடைந்தவர் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிரான்குளம் பகுதியிலிருந்து இரு இளைஞர்கள் மோட்டார் சைக்கிள் ஒன்றில் களுதாவளை நோக்கிச் சென்றனர். மிகவும் வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிள், மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதியின் குருக்கள்மடம் வளைவுப் பகுதியில் இருந்த மின்கம்பத்தில் மோதியே இந்த விபத்து நிகழ்ந்தது.

உயிரிழந்தவரின் சடலம் களுவாஞ்சிக்குடி மருத்துவமனை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் பெரும் சேதமடைந்துள்ளதாகவும் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## சந்நிதி - கதிர்காம யாத்திரை குழுவினருக்கு சீனக்குடாவில் கோலாகலமான வரவேற்பு



சீனக்குடா, ஜூன் 03

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ்ப்பாணம் சந்நிதி - கதிர்காம ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினருக்கு திருகோணமலை சீனக்குடாவில் கோலாகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் சார்பாக அங்கு சென்ற காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், பாதயாத்திரை குழுவின் ஆலோசகர் வி. ரி. சகாதேவராஜா ஆகியோர் வரவேற்பளித்தனர்.

கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்த இந்த பாதயாத்திரை தொடர்ந்து இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.


89 அடியவர்கள் இந்தப் பாதயாத்திரை குழுவில் இடம்பெற்றுள்ளனர். (எ)

## மகா கும்பாபிஷேகம்

துறைநீலாவணை, ஜூன் 03

மட்டக்களப்பு துறைநீலாவணை முத்துமாரியம்மன் ஆலய புனராவர்த்தன அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு நாளை மறுதினம் 5 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக நிகழ்வின் கர்மாரம்பம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளதுடன் பால்காப்பு நிகழ்வானது நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. அதனைத் தொடர்நது 10 நாட்கள் மண்டலாபிஷேகப் பூசையைத் தொடர்ந்து அம்மனுடைய திருக்கதவு 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை திறக்கப்பட்டு உற்சவம் 7 தினங்கள் இடம்பெறள்ளன. இதில் தீமிதிப்பு வைபவம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெறவுள்ளது. (எ)



## உலக சைக்கிள் தினத்தை முன்னிட்டு பேரணி

கல்முனை, ஜூன் 03

உலக சைக்கிள் தினத்தை முன்னிட்டு நேற்றுக் காலை கல்முனை பிரதேச செயலகம் மற்றும் கல்முனை தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துடன் ரைடர்ஸ் ஹப் சைக்கிளிங் கழகம் இணைந்து சர்வதேச சைக்கிளோட்ட தினப் பேரணியை மருதமுனை பறக்கத் டெக்ஸ் முன்றலில் ஒன்று கூடி கல்முனை நகர்வரை சென்று மீண்டும் மருதமுனை கடற்கரை பகுதியிலுள்ள வெளிச்சவீடு அருகில் நிறைவடைந்தது. (எ)

# திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகளின் பெறுபேறு நிறுத்தம்

## இனப்பாகுபாட்டின் வெளிப்பாடு என்று இம்ரான் மகரூப் எம். பி. குற்றச்சாட்டு

திருகோணமலை, ஜூன் 03

திருகோணமலை ஸாஹிரா கல்லூரி மாணவிகளின் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. பரீட்சை மண்டபத்தில் தமது காதுகளை மூடி பரீட்சை எழுதினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த மாணவிகளின் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

காதுகளை மூடி பரீட்சை எழுதியமை பரீட்சை மண்டபத்தில் கவனித்திருக்க வேண்டிய விடயம். அது ஏனைய பரீட்சார்த்திகளைப் பாதிக்கின்ற விடயமும் அல்ல.

இந்த விடயங்களை சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்திய பின்னரும் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளமை பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், ஸாஹிரா கல்லூரியின் வளர்ச்சியைச் சகிக்க முடியாதவர்களின் இனப்பாகுபாட்டின் வெளிப்பாடு இதுவென்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

பரீட்சை மண்டபத்தில் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்த விடயத்தை பெறுபேற்றை இடைநிறுத்தும் அளவுக்கு கொண்டு சென்ற பரீட்சை மேற்பார்வையாளரின் மனோநிலையை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஒரேமொழியை பேசும் நாம் இப்படி பிள்ளைகளின் உரிமைகளில் கைவைப்பது ஆரோக்கியமானதல்ல. பிள்ளைகளினதும் பெற்றோரினதும் இன்றைய சோகமான மனோநிலையை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.


இது குறித்து பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். இந்த விடயத்தில் சகல முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும் ஒன்றுபட வேண்டும். இது ஒரு சமூகப் பிரச்னை.

கிழக்கு மாகாண முஸ்லிம் விரோதச் செயல்பாடுகளின் மற்றொரு வடிவம் இது என அவர் மேலும் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹமாஸ் அழியும் வரை காஸாவில் போர் ஓயாது

## பைடனின் அறிவுரையை நிராகரித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு உறுதி



டெல் அவிவ், ஜூன் 03

**ஹமாஸ் அமைப்பினர் அழித்து ஒழிக்கப்படும் வரை காஸாவில் போர் தொடரும் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் அதனை நிராகரித்து இஸ்ரேல் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

காஸா மீதான இஸ்ரேலில் போர் இன்னும் நீடித்து வரும் நிலையில், கடந்த மே 26 ஆம் திகதி ரபா அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள், பெண்கள் உட்பட 45 பேர் கொல்லப்பட்டனர். இதையடுத்து உலக நாடுகளின் கவனம் ரபாவின் பக்கம் திரும்பியது. அண்மையில், ஸ்பெயின், அயர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் கூட்டாக பலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்தன.


இருப்பினும் நாளுக்கு நாள் மோதல்கள் அதிகரித்து வருகின்றன. இந்த நிலையில் காஸாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தும் முகமாக புதிய திட்டம் ஒன்றை இஸ்ரேல் முன்மொழிந்துள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்தார்.

அத்தோடு, இஸ்ரேல் முன்மொழிந்துள்ள திட்டத்தின் படி, ஆறு வார காலத்துக்குள் படிப்படியாக மக்கள் அதிகமாகவுள்ள இடத்திலிருந்து இஸ்ரேல் படைகள் வெளியேறும் என்றும் போரை முடிவுக்கு கொண்டு வந்து அமைதியை ஏற்படுத்துவதற்கான இந்த வாய்ப்பை தவற விட்டு விடக்கூடாது என்றும் பணயக் கைதிகள் வெளியேற்றம் குறித்தும், ஹமாஸ் இந்த முன்மொழிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, காஸாவில் நீடிக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகள் மாறவில்லை. ஹமாஸின் இராணுவத்தை அழிப்பது, அனைத்துப் பணயக்கைதிகளையும் விடுவிப்பது மற்றும் காஸா இனி இஸ்ரேலுக்கு எந்த விதத்திலும் அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதி செய்தல் போன்றவற்றை அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே உடனடி போர் நிறுத்தத்துக்கு கனடா அழைப்பு விடுப்பதாக அந்த நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். "உடனடி போர் நிறுத்தம், தடையில்லா மனிதாபிமான உதவிகளை அவசரமாக அதிகரிப்பது மற்றும் பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்க கனடா அழைப்பு விடுத்துள்ளது என்று எக்ஸ் வலைத்தள பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் துயரத்தை முடிவுக்குக் கொண்டுவர ஜோ பைடனால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவு ஒரு வாய்ப்பாகும். மேலும் அமைதிக்கான பாதைக்குத் திரும்ப வேண்டும் என்வும் ஜஸ்டின் ட்ரூடோ வலியுறுத்தியுள்ளார். (எ)



# மணிப்பூர், அசாமில் மழை மேலும் 8 பேர் உயிரிழப்பு!

டில்லி, ஜூன் 03

இந்தியாவின் மணிப்பூர், அசாமில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் மேலும் 8 பேர் உயிரிழந்தனர். கடந்த வாரம் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியது. இந்தப் புயலுக்கு ரீமல் எனப் பெயரிடப்பட்டது.


இது பங்களாதேஷ் மற்றும் அதையொட்டிய மேற்குவங்க மாநில கடற்கரை இடையே கடந்த மாதம் 26 ஆம் திகதி நள்ளிரவில் கரையைக் கடந்தது. இதனால் வடகிழக்கு மாநிலங்களான அசாம், திரிபுரா, மணிப்பூர், மேகாலயா, மிசோரம் ஆகிய மாநிலங்களில் கனமழை பெய்தது. இதனால் வீதிகள் மழை நீரில் அடித்துச் செல்லப்பட்டன. மேம்பாலங்கள் உடைந்தன. விளைநிலங்களை வெள்ளம் சூழ்ந்தது.

மணிப்பூரின் இம்பால், அசாமின் குவாஹாட்டி உள்ளிட்ட பல்வேறு நகரங்கள், கிராமப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. இந்த நிலையில், நேற்று முன்தினம் அசாம், மணிப்பூர் ஆகிய மாநிலங்களில் வெள்ளம், மழைக்கு 8 பேர் உயிரிழந்ததாக தகவல்கள் வந்துள்ளன. இதையடுத்து வடகிழக்கு மாநிலங்களில் கனமழை, வெள்ளத்துக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 53 ஆக உயர்ந்தது.

மழை, வெள்ளம் காரணமாக அசாம், மணிப்பூரில் மட்டும் 5 இலட்சத்துக்கும் அதிகமான பொது மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# அருணாச்சலப்பிரதேசத்தில் மீள ஆட்சியை தக்கவைத்த பா. ஜ. க.

டில்லி, ஜூன் 03



இந்தியாவின் அருணாச்சலப்பிரதேசத்தில் மொத்தமுள்ள 60 சட்டசபை தொகுதிகளுக்கு கடந்த ஏப்ரல் 19 ஆம் திகதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில், ஆளும் பா. ஜ. க. 60 தொகுதிகளில் வேட்பாளர்களை களமிறக்கியது. காங்கிரஸ் 19 தொகுதிகளில் மட்டுமே வேட்பாளர்களை களமிறக்கியது. தேசிய மக்கள் கட்சி உட்பட பிற கட்சிகளும் களமிறங்கின.

இதேவேளை, களத்தில் போட்டி வேட்பாளர்கள் இல்லாததால் முதலமைச்சர் பெமா காண்டு உட்பட 10 பா. ஜ. க. வேட்பாளர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து எஞ்சிய 50 சட்டசபை தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

பெரும்பான்மைக்கு 31 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் ஆளும் பா. ஜ. க. 45 தொகுதிகளைக் கைப்பற்றி அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் அருணாச்சலப்பிரதேசத்தில் பா. ஜ. க. ஆட்சியைத் தக்கவைத்துள்ளது. தேசிய மக்கள் கட்சி 6 தொகுதிகளை கைப்பற்றியது. பிற கட்சிகள் 8 தொகுதிகளைக் கைப்பற்றின. காங்கிரஸ் ஒரு தொகுதியைக் கைப்பற்றியது.

# கடவுள் நம்பிக்கை இருந்தால் வீட்டில் தியானம் செய்யலாம்

## மோடியை விமர்சித்த கார்கே

டில்லி, ஜூன் 03

உங்களுக்கு கடவுள் மீது நம்பிக்கை இருந்தால் வீட்டிலேயே தியானம் செய்யலாம் என்று பிரதமர் மோடியை காங்கிரஸின் தலைவர் மல்லிகார்ஜன கார்கே விமர்சித்துள்ளார்

தமிழகத்தின் கன்னியாகுமரியில் உள்ள விவேகானந்தர் நினைவு மண்டபத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூன்று நாட்கள் தியானம் மேற்கொண்டார். இதனை விமர்சித்துள்ளார் கார்கே,

"அரசியலையும், மதத்தையும் ஒருபோதும் இணைக்கக்கூடாது. அது இரண்டுமே தனித்துதான் இருக்க வேண்டும். ஒரு மதத்தை சேர்ந்தவர் உங்கள் பக்கம் இருக்கலாம். மற்றொரு மதத்தை சேர்ந்தவர் உங்களுக்கு எதிராக இருக்கலாம். அதனால் மதம் சார்ந்த உணர்வுகளையும் தேர்தலையும் இணைப்பது என்பது தவறானது.

பிரதமர் கன்னியாகுமரி சென்று நாடகமாடியுள்ளார். இதனால் நாட்டுக்கு தான்



தீங்கு.

அவர் என்ன சொன்னாலும் மக்கள் அவரை நம்புவதற்கும், தலைவராக ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை. பணவீக்கம், விலைவாசி மற்றும் வேலை வாய்ப்பு போன்றவற்றை மக்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளனர்" என கார்கே தெரிவித்தார். (எ)

# சட்டஅமைப்பு மீதான மக்களின் நம்பிக்கைக்குப் பெருத்த சேதம்

நியூயோர்க், ஜூன் 03

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தேர்தல் நிதியை முறைகேடாகக் கையாண்ட வழக்கில் குற்றவாளி என அந்த நாட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது. இந்த நிலையில், ட்ரம்புக்கு ஆதரவாக உலகின் முன்னணி பணக்காரரான எலான் மஸ்க் குரல் கொடுத்துள்ளார்.

"ஒரு நாட்டின் முன்னாள் ஜனாதிபதி இதுபோன்ற விவகாரத்தில் குற்றவாளி என அறிவிக்கப்பட்டுள்ளார். அதிலிருந்தே தெரிகிறது இந்தத் தீர்ப்பில் அரசியல் உந்துதல் உள்ளது என்று. இதே நிலை யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். இது அமெரிக்க சட்ட அமைப்பின் மீதான மக்களின் நம்பிக்கைக்கு பெருத்த சேதமாக அமைந்துள்ளது" என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப், தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க ஆபாச நடிகை ஸ்டோமி டேனியல்ஸூக்கு சுமார் 1. 3 இலட்சம் டொலர்களை 2016 ஆம் ஆண்டுக்கான தேர்தல் பிரசார நிதியிலிருந்து கொடுத்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. அதை மறைக்க போலி பற்றுச்சீட்டுக்களைச் சமர்ப்பித்தது உறுதியானது. இதனால் ட்ரம்ப் குற்றவாளி என்று நீதிமன்றம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

எங்கள் பாசமிகு அப்பா எங்களை விட்டுப் போய் இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இத்தினமதில், ஒரு தந்தை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக, அவரிடம் இருந்த சில குணங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன். வாழ்க்கையில் போராடும் இளம் தந்தைகளுக்கு இது ஒரு உத்வேகமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

நாங்கள் அனைவரும் உயர் கல்விக்காக பல்கலைக் கழகத்திற்கு நுழையும் வரை அவர் மிகவும் கண்டிப்பானவராக இருந்தார். ஆனால் அதன்பின்பு அவரிடம் ஒரு மகத்தான மாற்றத்தை உணர்ந்தோம். அவர் எங்களுக்கு சுதந்திரம் அளித்தார். அவர் நாங்கள் பேசுவதை கேட்க விரும்புவதோடு, சொந்தமாக முடிவெடுக்கும் அளவுக்கு நாம் முதிர்ச்சியடைந்துவிட்டோம் என்று கருதி பின்னர் தனது ஆலோசனைகளை வழங்குவார். 'பிள்ளைச் செல்லம் மனசில இருக்க வேண்டும்' என்று எப்போதும் சொல்லுவார். ஆனால் அவரது பேரக் குழந்தைகளோடு மட்டும் அவர் அப்படி இல்லை.

எமது வீட்டினுள் கதவு நிலைக்கு மேலே வைத்துள்ள இறைவனின் கடைசி இராப்போஜனத்தின் புகைப்பட சட்டத்திற்குப் பின்னால் எப்போதும் ஒரு பிரம்பு இருக்கும். இருப்பினும், அதை அவர் எந்த நேரத்திலும் பயன்படுத்தியதில்லை. நாங்கள் தப்பு செய்தால் அவர் அதை புகைப்பட சட்டத்தின் பின்னாலிருந்து வெளியே எடுப்பார் என்பது மட்டும் எங்களுக்குத் தெரியும்.

தான் நேரம் தவறாது நடப்பதன் மூலம், அவர் நமக்கு நேரந்தவறாமையைக் கற்றுக் கொடுத்தார். எப்போதுமே 30 நிமிடங்களுக்கு முன்னதாகவே குறிப்பிட்ட இடத்திலிருப்பார். வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு முன் அவர் வங்கியை (அவர் வேலை செய்த இடம்) திறக்கச் செல்கிறார் என்று எல்லோரும் சொல்வார்கள். அவர் காலை 7 மணிக்கு ஒரு செய்தித்தாளுடன் வங்கியில் இருப்பார்.

எந்த மதமும் சாராத நூலகிய திருக்குறளின் அடிப்படையில் அப்பா தம் வாழ்வை அமைத்ததோடு நம்மையும், தன் பேரக்குழந்தைகளையும் திருக்குறளை மனப்பாடம் செய்து கற்க வைத்தார். நமது பாடசாலைக் காலத்தில் ஒவ்வொரு நாளும் காலை எழுந்தவுடன் நாட் கலண்டரில் உள்ள வாசகத்தை (திருக்குறள் / ஆத்திசூடி / மூதுரை) நாம் கட்டாயம் மனனம் செய்து அவரிடம் சொல்லியே ஆகவேண்டும். உங்கள் பிள்ளைகளுக்கு திருக்குறளையும் அதன் பொருளையும் சொல்லிக் கொடுங்கள், அதன்படி நடந்தால் வாழ்க்கையில் தவறு செய்யாமல் நேர்மையோடு தம் கடமையை சரியாக செய்வார்கள் என்று எம்மிடமும் வீட்டிற்கு வரும் எல்லோரிடமும் கூறுவார்.

அதிகாலையில் எம்மை படிப்பதற்காக எழுப்பும் போது எழும்ப பஞ்சிபட்டாலோ அல்லது படிக்கும் நேரத்தில் பசிக்கிது என்றாலோ அப்பா சொல்வார்
"மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார்
கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும்
மேற்கொள்ளார்.
செவ்வி அருமையும் பாரார் ; அவர்தம்
கருமமே கண்ணாயினார்". அவருடைய கடைசி நாட்கள் வரையும் கூட அவர் கற்ற விடயங்களை மறக்காது கூறிக்கொண்டிருப்பர்.

அவர் எந்த மத நம்பிக்கைகளுக்கும் கட்டுப்படாதவராக இருந்தாலும், புனித திருமுழுக்கு யோவான் தேவாலயத்தில் ஞாயிறு ஆராதனைகளுக்கு எங்களுக்கு முன்பே முதலாவதாக வந்துவிடுவார். ஏனெனில் சிறுவயதிலிருந்தே கற்பிக்கப்பட வேண்டிய சில ஒழுக்க நெறிகள் நம் வாழ்நாள் முழுவதும் நம்மை ஒழுக்கமாக வைத்திருக்க உதவும் என்று அவர் உணர்ந்ததால் தான் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் ஞாயிறு பாடசாலை வகுப்புகளை எக்காரணம் கொண்டும் தவிர்க்க முடியாது என்பது அவரது கட்டளை. அத்தோடு ஞாயிறு ஆராதனைக்கு போகாமல் வீட்டில் இருக்கவும் முடியாது.

அவர் கைக்கடிகாரம் அணிவதில்லை. ஆனால் நீங்கள் நம்பமாட்டீர்கள், அவர் அலாரம் வைக்காமல் அதிகாலை 4 மணிக்கு சரியாக எழுந்திருப்பார். அவர் கண்விழித்திருந்தால், எந்த சந்தேகமும் இல்லாமல் அதிகாலை 4 மணி என்று சொல்லலாம்.

அவர் முற்கூட்டியே திட்டமிடுபவராக இருந்தார். நாங்கள் ஐந்து பேர் பிள்ளைகள். வங்கிச் சம்பளத்தை மட்டும் வைத்துக்கொண்டு எங்களைப் படிப்பிப்பது கடினம் என்பதை அவர் புரிந்து கொண்டார். எனவே அவர் ஒரு வெல்டிங் பட்டறையை ("Gandeepan Iron Workshop") ஆரம்பித்து, அதில் முதலீடு செய்து, சில வேலையாட்களை வைத்து, ஒப்பந்தம் செய்தமையால், எங்களின் அனைத்து செலவுகளையும் சமாளிக்க மேலதிக வருமானம் கிடைத்தது. எனவே அவர் மாலை 4 மணிக்கு வங்கியிலிருந்து வந்த பிறகு தொடர்ந்து ஒரு முதலாளியாக வேலை செய்ய வேண்டியிருந்தது.

அவர் தனது வாழ்க்கையில் எளிமையைக் கடைப்பிடித்தார். ஒப்பந்தங்களைப் பெறுவதற்கோ அல்லது தனது பட்டறையின் தயாரிப்புகளை வழங்குவதற்கோ தனது ஊழியர்களுடன் லேண்ட் மாஸ்டர் அல்லது டிராக்டரில் செல்வதற்கு கூட அவர் வெட்கப்படவில்லை.

அம்மா வாங்கித் கொடுத்தாலொழிய, ஒரு சேட் கூட அவர் தனக்காக வாங்கியதில்லை.

அவர் தனது வாழ்நாள் முழுவதும் எங்கும் பயணம் செய்ய ரலி சைக்கிளை மட்டுமே பயன்படுத்தினார். 30 வயதில் இருந்து 70 வயதிற்கும் மேலாக அவருடைய ஒரே வாகனம் அதுதான். தன்னால் முடியாத வயதில் கூட தினமும் சைக்கிளில் வங்கி அலுவல்களுக்கோ அல்லது பூங்காவிற்கோ சென்று வருவார். வீட்டில் ஓய்வில் இருந்த காலத்தில் வீட்டை சுற்றி நடப்பார். ஏனெனில் தனக்கு நடக்கமுடியாமல் போனால் தன் பிள்ளைகளுக்கு சுமையாகிவிடும் என்று யோசித்தார்.



மந்துவிலை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## சின்னையா தங்கராஜா (BA Ceylon)

(ஓய்வு நிலை உத்தியோகத்தர், ஹற்றன் நஷனல் வங்கி)

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று."
(ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதனால் புகழோடு தோன்ற வேண்டும். அத்தகைய சிறப்பு இல்லாதவர் அங்கு தோன்றுவதை விட தோன்றாமலிருப்பது நல்லது.)
-திருக்குறள்-

அவர் தனது வேலையில் பதவி உயர்வு பெறவில்லை. அவருக்கு தகுதி இல்லாததால் அல்ல ஆனால் அவர் வேண்டுமென்றே அதைத் தவிர்த்தார். ஏனென்றால் அவர் தனது குடும்பத்தை விட்டு வெளியேறி தொலைதூர இடத்தில் வேலை செய்ய விரும்பவில்லை. அவர் தனது வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் தனது குழந்தைகள் இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

அவர் எங்கள் யாரையும் எம் உறவினர் வீட்டில் தங்க விடுவதில்லை. அவர் நாங்கள் அக்கம் பக்கத்தில் விளையாட போவதை பெரிதும் விரும்பியதில்லை. நாங்கள் விளையாட விரும்பினால் "மாலையில் பாடசாலை மைதானத்திற்குச் சென்று உங்கள் வகுப்பு தோழர்களுடன் விளையாடுங்கள்" என்று கூறுவார். அந்த நாட்களில், பிரத்தியேக தனியார் வகுப்புகள் எங்களுக்கு விளையாட ஒரு தடையாக இருக்கவில்லை.

அப்பா அவருடைய பாடசாலைக் காலத்தில் அவருடைய ஊரில் ஆங்கிலம் கற்க கூடிய வசதி வாய்ப்புக்கள் இல்லாமையால் நாம் அனைவரும் ஆங்கிலத்தில் சரளமாக பேச வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வமாக இருந்தார். அவர் முதல் மூன்று பிள்ளைகளையும் பெஞ்சமின் மாஸ்டர் என்ற ஆசிரியரிடம் அழைத்துச் சென்றார். மேலும் அவர்கள் கற்றுக்கொண்ட ஒரே புத்தகம் "Living English Structure". அப்பாவைப் போலவே கண்டிப்பான அக்காவை எங்கள் ஆசிரியராக அப்பா ஆக்கினார். எங்களுடைய ஆங்கிலப் புலமைக்கு ஒரே காரணம் எம் சகோதரி கவிதாதான். அவரைப் போல யாரும் எமக்கு சரியான முறையில் ஆங்கிலம் கற்பிக்கவில்லை.

நாங்கள் மூவர் மருத்துவத்துறையில் இருக்கிறோம். முதல் நாள் நாங்கள் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற போதும் பின்னரும் கூட "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்" என்று அடிக்கடி திருக்குறள் மூலம் எங்களுக்கு அறிவுரை கூறினார்.

பாடசாலை நாட்களில் நாங்கள் எந்த காரணத்திற்காகவும் லீவு எடுத்து வீட்டில் நிற்க அப்பா அனுமதிக்க மாட்டார். நாங்கள் வேலை செய்ய ஆரம்பித்த பிறகும் அது தொடர்ந்தது. அவரது கடைசி இரவில் கூட நான் வைத்தியசாலையில் இரவு 11 மணி வரை பணியில் ஈடுபட்டிருந்தேன். அவர் படுத்த படுக்கையில் வீட்டில் என்னைத் தேடிக் கொண்டிருந்தார். ஆனால் யாரும் என்னை அழைப்பிக்க அவர் அனுமதிக்கவில்லை.

அவர் பழைய அல்லது பயன்படுத்திய புத்தகங்களை எறிய எங்களை விடுவதே இல்லை. இன்னும் அவர் படித்த புத்தகங்கள் உட்பட நாங்கள் படித்த அனைத்து புத்தகங்களையும் வைத்து நூலகமாக ஒரு அறை உள்ளது. அவருடைய ஓய்வு காலத்திலும் அவர் நூல்களை வாசிப்பதில் நேரத்தை செலவழித்திருந்தார். அவர் எங்களையும் பேரப்பிள்ளைகளையும் ஓய்வு நேரங்களில் புத்தகங்களை வாசிப்பதற்கே வழிப்படுத்தினார்.

அவருடைய ஒழுக்கத்தின்படி வாழ்க்கையில் ஆடம்பரங்கள் இருக்கமுடியாது. குறைந்தபட்ச வசதிகள் மற்றும் வருமானத்தில் வாழக் கற்றுக்கொடுத்தார். கூடுதல் கட்டணம் இல்லை. பரிசுகள் அல்லது சலுகைகள் இல்லை. எங்கள் வேலைக்காக முன்னுரிமைகள் எதுவும் எதிர்பார்க்கப்படக்கூடாது. நாம் சம்பாதிப்பது நமது செலவுகளை விட அதிகமாக இருந்தால், அது சேமிக்கப்பட வேண்டும், ஆடம்பரத்திற்காக வீணடிக்கப்படக்கூடாது என்று அறிவுறுத்துவார்.

அவர் தன்னுடைய இறுதிக்காலத்தில் கூட உண்டபின் மீதமான உணவை அதிகாலை 3 மணிக்கு எழுந்து குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுத்து பாண் எனின் சிறிய துண்டுகளாக்கி தயாராக வைத்துவிட்டு காலை 5 மணிக்கு வெளியே சென்று காகங்களுக்கு அதனை வைப்பர். அத்தோடு வெயிலில் செல்லும் பறவைகளுக்காக கிணற்றடியில் வாளியில் தண்ணீர் நிரப்பி வைப்பர். உணவினை விசிற கூடாது விசிறினால் ஒரு காலத்தில் உண வில்லாமல் இருப்பீர்கள், ஒரு இடத்தில் வைத்தால் பிராணிகள் உண்ணலாம் என்று கூறுவார்.

எப்படி உடை உடுத்த வேண்டும் என்பதைக்கூட எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார். "நீ இருக்கும் இடத்துக்குத் தகுந்த மாதிரி உடுத்து" என்று சொல்வார். எந்த நேரத்திலும் சவரம் செய்யப்படாத முகத்துடன் அவரைப் பார்க்க முடியாது. சேட்டை காற்சட்டைக்கு வெளியே விட்டுக்கொண்டு எங்கும் செல்லமாட்டார். அத்தோடு இளம் நிற சேட் தான் அணிவார்.

அம்மாவும் (ரெபேக்கா ஜீவமணி) அவருக்கேற்ற விதத்தில் அவருக்கு சேவை செய்தமை அப்பா தன்னுடைய இலக்கை அடைவதற்கு உறுதுணையாக இருந்தது. அம்மா தனக்கு முடியவிட்டாலும் அப்பாவின் சுகவீன காலத்திலும் அவருடைய சகல தேவைகளையும் உரிய நேரத்தில் செய்து வைப்பார். அப்பா வேலை செய்த நாட்களில் உணவு உண்பதை கூட காலை 6 மணி மதியம் 12 மணி இரவு 6 மணி என சரியாக ஒழுங்கமைத்திருத்தார்.

அவர் மனதைரியம் கொண்டவர். அவர் வங்கியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு பல பெரிய அறுவை சிகிச்சைகளுக்கு உட்பட்டார். ஆனால் அவர் அதையெல்லாம் தாண்டி பிழைத்து வந்தது அவர் தனது குழந்தைகளுக்காக இயல்பு நிலைக்கு வர வேண்டும் என்ற அவரது மனதைரியத்தின் காரணமாக மட்டுமே.

அவர் ஒரு நல்ல மாமனார். குறிப்பாக அவர்களுடன் தனியாகப் பேச வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் வாழ்க்கையை எவ்வாறு சரியான முறையில் கையாள வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுரை கூறுவார். அதனாலேயே இங்கு யாழ்ப்பாணத்தில் இருந்த மருமக்கள் அவருடன் அவரது கடைசி நாளிலும் பொழுதைக் கழித்த அதிர்ஷ்டம் அவருக்கு கிடைத்திருந்தது. கடைசி நாள் என்று தெரியாமல் மணிக்கணக்கில் அவர்களது கைகளைப் பற்றிக் கொண்டிருந்தார்.

அவர் எந்த ஒரு தீய பழக்கமும் அற்றவர். இதுவே ஒரு தந்தைக்கு இருக்கக் கூடிய மிகச் சிறந்த குணம் என்று நான் கூறுவேன். தனது தந்தை (சின்னையா) தனக்கு கூறிய "பாசத்தைக் வெளியில் காட்டதே உன் கடமையை செய்" என்ற கோட்பாட்டையே அப்பா தனது குறிக்கோளாக கொண்டிருந்தார். அப்பாவினுடைய தாயார் (பொன்னி) கூட மிகவும் கண்டிப்பாகவே அப்பாவை வளர்த் திருந்தார்.

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" என்ற திருக்குறளிற்கு அமைய அவர் பிள்ளைகளான எங்கள் ஐவரையும் தொடர்ந்து மேற்படிப்புகளை படி என்று ஊக்குவித்து தற்போது உயர்வான தொழிலில் சேவை செய்ய உருவாக்கியுள்ளார்.

- Dr. Gavitha Jeshanthan, BDS (Peradeniya)
  Dental Surgeon, Base Hospital, Tellipalai
- Dr. Thangarajah Gandeepan, MBBS, MBA, MSc & MD in Medical Administration (Colombo)
  Senior Registrar in Medical Administration,
  Ministry of Health, Colombo. (Higher Studies, UK)
- Mr. Thangarajah Mayooran, BBA HONS, AIB
  Sri Lanka DTRM IBSL
  Deputy Country Manager,
  Bank of Ceylon, Chennai Branch
- Mrs. Tharani Thinesh, BICT, PGDE
  Web Developer & Teacher, ICT (J/NMV & J/HTGS).
- Dr. Kasthuri Jeevagan, MBBS, DCH,
  MD Paediatrics (Colombo)
  Consultant Paediatrician, Base Hospital, Chavakacheri.

அப்பா தனது வாழ்க்கையை நன்றாக திட்டமிட்டார். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடன் தன் பிள்ளைகள் வாழ வழிவகுத்தார். யாருடைய உதவியும் இல்லாது தனி ஆளாக உழைத்து அவர் தனது பிள்ளைகளை சொந்த காலில் நிறுத்தி தனது செலவுகள் முடிவடைந்த பிறகு தன் மனைவி பிள்ளைகளுக்காகவும் தனது ஒவ்வொரு பேரக்குழந்தைகளுக்காகவும் தனித்தனியாக பணத்தைச் சேமித்து வைத்திருந்தார். அவர் நிரந்தரமாக ஓய்வெடுக்க வேண்டும் என்பதை உணர்ந்து தனது கடைசி நாட்களில் எல்லாவற்றையும் முறையாக அக்காவிடம் ஒப்படைத்தார்.

அவரைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மந்துவில் என்ற பின் தங்கி இருந்த கிராமத்திலிருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு முதல் நபராகத் தெரிவு செய்யப்பட்ட, 25 வருடங்களுக்கும் மேலாக வங்கியில் எந்தப் பதவி உயர்வையும் ஏற்றுக் கொள்ளாது பணியாற்றி அவருடைய 5 குழந்தைகளையும் பட்டதாரிகளாக்கிய திரு சின்னையா தங்கராஜா அவர்களின் மகள் நான் என்று எப்போதும் பெருமையுடன் சொல்வேன். அவருடைய அனைத்து தியாகங்களுக்காகவும் அவர் எப்போதும் போற்றப்படவும் நினைவுகூரப்படவும் வேண்டும்.

என்றும் நீங்கா நினைவுகளுடன்,
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தும பண்டாரவுக்கு மீள ஐ. தே. கவில் உறுப்புரிமை



## ரணில் புதுவியூகம்

கொழும்பு, ஜூன் 03

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டாரவுக்கு கட்சியின் உறுப்புரிமையை வழங்கி, கட்சியில் மீள இணைத்துக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று ஞாயிற்றுக்கிழமை தீர்மானித்துள்ளது.

ரஞ்சித் மத்தும பண்டாரவின் கட்சி உறுப்புரிமையை ஐக்கிய தேசியக் கட்சி 2020 ஆம் ஆண்டு இடைநிறுத்தியது. எவ்வாறாயினும், கட்சி அங்கத்துவம் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளைத் தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில், ஞாயிற்றுக் கிழமை கூடிய செயற்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

(எ)

## காசோலையூடாக பண மோசடி! யாழ்ப்பாணத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 03


யாழ்ப்பாணத்தில் நிறப்பூச்சுகள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றில் பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர், காசோலையை கொடுத்து ஏமாற்றிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த இருவரே நிறுவனத்திடம் 11 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களைக் கொள்வனவு செய்த பின்னர் காசோலையை வழங்கியுள்ளனர்.

இந்தக் காசோலையைக் கொண்டு சென்று வங்கியில் வைப்புச் செய்ய முற்பட்டபோதே அந்த வங்கிக்கணக்கில் பணம் இல்லை எனத் தெரியவந்துள்ளது.

பின்னர், நிறப்பூச்சு நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் காசோலை மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை கைது செய்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர். (எ)

## 300 மீற்றர் உயரத்தில் இருந்து பாறை விழுந்து ஓட்டோ சேதம்



கொழும்பு, ஜூன் 03

கடும் மழை காரணமாக கொலவெனிகம, தெனியாய கல்பொத்தஹேன பகுதியில் வீடொன்றின் கொட்டகையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோவின் மீது பெரிய பாறை விழுந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது.

சுமார் 300 மீற்றர் உயரத்தில் இருந்து இந்த பெரிய பாறை கீழே விழுந்ததுடன், ஓட்டோவில் மோதி பாறை நின்றதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். (எ)

## தமிழ்த் தேசிய...

பொது வாக்கெடுப்பாகக் கையாள்வது.

அதற்காக சிவில் சமூகமும் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பை உருவாக்குவது, தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசைகளில் ஒன்றான இறைமையுடனான சுயநிர்ணய உரிமையை வெற்றி கொள்வதற்கான பொருத்தமான எதிர்காலக் கட்டமைப்புகளை நோக்காகக் கொண்டு செயல்படுவது உள்ளிட்ட 5 அம்சங்கள் வலியுத்தப்பட்டன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நடப்புத் தலைவர் மாவை சேனாதிராசா கட்சியின் நிலைப்பாட்டைத் தெரிவிப்பதற்குக் கடந்த மே 19ஆம் திகதி வரையிலும் அவகாசம் கேட்டிருந்தார். மே 19ஆம் திகதி நடந்த மத்திய குழுக்கூட்டத்தின் அடிப்படையில் அந்தக் கட்சியானது அது தொடர்பான முடிவை இப்போதைக்கு எடுப்பதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது. எனினும் கட்சிக்குள் ஒரு பகுதியினர் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கிறார்கள். அதற்கு ஆதரவாகப் பொது வெளியில் பேசியும் வருகிறார்கள்.

செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிப்பது என்ற முடிவில் உறுதியாகவுள்ளது என்பது வெளிப்படுத்தப்பட்டது. பொது வேட்பாளர், தேர்தல் புறக்கணிப்பு ஆகிய இரண்டும் ஏறக்குறைய ஒரே அடிப்படையைக் கொண்டவை என்பதை அந்தக் கட்சி ஏற்றுக் கொள்கின்றது. எனினும், இரண்டு தெரிவுகளிலும் பொது வேட்பாளரில்தான் ஆபத்து அதிகம் என்று அந்தக் கட்சி நம்புகின்றது. அந்த அடிப்படையில் அவர்கள் தேர்தலை புறக்கணிப்பது என்ற முடிவைத் தெரிவித்தார்கள்.

சி. வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளது. ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். எனினும், அதன் பங்காளிக் கட்சிகள் தனித்தனியாக பொது வேட்பாளருக்கு ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதேபோல, தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், அனந்தி சசிதரனின் ஈழத்தமிழர் சுயாட்சி கழகம் என்பனவும் கட்சிகளை சாராத அரசியல்வாதிகளான க. அருந்தவபாலன் உள்ளிட்டோரும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

இதேபோன்று, இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சி. சிறீதரன் பொது வேட்பாளர் தெரிவை தொடர்ச்சியாக ஆதரித்து வருகிறார். நாடாளுமன்ற உறுப்பினர், எம். ஏ. சுமந்திரன் பொது வேட்பாளர் தொடர்பில் உள்ள ஆபத்துக்களை சுட்டிக்காட்டிக் கருத்துத் தெரிவித்தார். எனினும், தமிழ் மக்களை ஒன்று திரட்டுவதற்கு இது ஒரு சரியான தருணம் என்றும், இத்தேர்தலில் தமிழ் மக்களை ஒன்று திரட்டத்தவறினால் அடுத்த ஆண்டு நடக்கக்கூடிய எல்லாத் தேர்தல்களிலும் தமிழ் மக்கள் சிதறி வாக்களிப்பார்கள் என்பதையும் சுட்டிக்காட்டிய பொழுது, அந்தத் தர்க்கத்தை அவர் ஏற்றுக்கொண்டார்.

தமிழ் மக்களை ஒரு மையத்தில் ஒன்றிணைப்பது என்ற விடயத்தில் அவருக்கும் எமக்குமிடையே வேறுபாடுகள் இருக்கவில்லை. எம்மைச் சந்திக்கும்போது அவர் பொது வேட்பாளரை நிராகரிப்பதற்கு ஒரு காரணத்தை வைத்திருந்தார். ஆனால், சந்திப்பு முடிந்தபோது பொது வேட்பாளரை ஆதரிப்பதற்கு மிகப் பலமான ஒரு நடைமுறை காரணத்தை ஏற்றுக் கொண்டதைத் தெரிவித்துச் சென்றார்.

பொது வேட்பாளர் தேவையா என்பது தொடர்பாகப் பொதுவெளியில் உரையாடல்களை நடத்துவது நல்லது என்று எம். ஏ. சுமந்திரன் சுட்டிக் காட்டியிருந்தார் . எனினும் பொது வேட்பாளர் தொடர்பாக வவுனியாவில் 2024 ஏப்ரல் 30ம் திகதி நடைபெற்ற பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவும், அதன் முன்னரும் பின்னரும் எம்மால் பல்வேறு மக்கள் அமைப்புகளுடன் நடத்தப்படும் கலந்துரையாடல்களும் பொது வெளியில் நடத்தப்படும் உரையாடல்கள்தான். அவ்வாறான உரையாடல்களே வவுனியாவில் பொதுமக்கள் அமைப்புகளின் கூட்டிணைவுக்கும், பொது வேட்பாளர் தொடர்பான கொள்கை அடிப்படைகளுக்கும், வவுனியா பிரகடனத்திற்கும் வழிவகுத்திருந்தன. இன்று வலுச் சேர்க்கின்றன. இன்றுள்ள நிலையில் பொது வேட்பாளர் தேவையா என்ற உரையாடலுக்குப் பதிலாகப் பொது வேட்பாளர் பிரதிநிதித்துவப் படுத்தும் கொள்கை நிலைப்பாடுகளுக்கு ஆதரவைத் திரட்டும் உரையாடல்கள் நிகழ்வதே பொருத்தமானது என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்புக்கள் பெருமளவுக்கு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தவை. ஏனைய மாவட்டங்களில் உள்ள தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளோடும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள், ஏனைய அரசியற் பிரமுகர்கள் என்பவர்களுடனும் எதிர்காலத்தில் சந்திப்புகள் இடம்பெறும். அந்த சந்திப்புக்களின் விபரங்கள் பின்னர் வெளியிடப்படும்.

மேற்கண்ட சந்திப்புகளின் பின் பொது மக்கள் அமைப்புகள் மீண்டும் விரைவில் நேரடியாகச் சந்திப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. அச்சந்திப்பில் கட்சிகளின் நிலைப்பாடுகள் ஆராயப்படுவதுடன் பொது மக்கள் அமைப்புகளின் கூட்டிணைவின் அடுத்த கட்ட வேலைத் திட்டங்கள், நடவடிக்கைகள் குறித்த முடிவுகளும் மேற்[illegible]ளது.

## ஒருநாளில் 10 பேர்...

உயிரிழந்தனர். அத்துடன், 11 வயது சிறுமி ஒருவர் மண்மேடு சரிந்து உயிரிழந்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் 3 பேர் உயிரிழந்தனர். தும்பர பகுதியிலும் ஒருவர் மண்மேடு சரிந்து உயிரிழந்தார். எல்பாத்த பகுதியில் நீரில் மூழ்கி பெண் ஒருவரும், கிரியெல்ல பிரதேசத்தில் மரம் முறிந்து வீழ்ந்து பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

இதேவேளை, மாத்தறை மாவட்டத்தில் இருவர் உயிரிழந்தனர். எல்லேவல பிரதேசத்தில் மண்மெடு சரிந்து வீழ்ந்தே இருவரும் உயிரிழந்தனர். மற்றொருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம், தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 5 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், வார இறுதியில் சீரற்ற கால நிலையால் 14 பேர் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ரணிலிடம்...

மேலும் தெரிவித்தவை வருமாறு,

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்தால் நாங்கள் எமது அரசியல் தீர்மானத்தை அறிவிப்பதாகக் குறிப்பிடுவது முறையற்றது. ஏனெனில், எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் ஒன்றிணைவதால் எமக்கு அரசியலில் எந்தவித பயனும் கிடைக்கப்போவதில்லை. அதேபோன்று எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இடைக்கால ஜனாதிபதியாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். ஜனாதிபதியின் பதவிக்காலம் எதிர்வரும் நவம்பர் மாதத்துடன் நிறைவடையும். அடுத்த ஜனாதிபதி பதவிக்கு தற்போதைய ஜனாதிபதியை தெரிவு செய்வதாக நாங்கள் அவருக்கு வாக்குறுதி வழங்கவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பேச்சுகளில் ஈடுபட்டுள்ளோம். சிறந்த கொள்கை திட்டம் உள்ள தரப்பினருடன் கூட்டணியமைப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் வைத்துக் கொண்டு நாங்கள் எமது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்தால் அரசாங்கம் நெருக்கடிக்குள்ளாகும்.

ஜனாதிபதியிடம் ஆலோசனை பெற்று நாங்கள் அரசியல் தீர்மானங்களை எடுப்பதில்லை. சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை முன்னிலைப்படுத்தி அரசியல் தீர்மானங்கள் எடுப்பதற்கு விசேட கவனம் செலுத்தியுள்ளோம். எக்காரணங்களுக்காகவும் கட்சியின் கொள்கைகளை விட்டுக் [illegible] போவதில்லை- என்றார். (எ)

## புதிய ஆசிரியர்...

ஆசிரியர்கள் இன்றைய தினம் கடமைகளை பொறுப்பேற்க வேண்டும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், இன்றைய தினம் நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, நாளை செவ்வாய்க்கிழமை பாடசாலை தினத்தில் புதிய பட்டதாரி ஆசிரியர்கள் தங்களுக்கு பணிக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு சென்று கடமைகளைப் பொறுப்பேற்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ- எ)

## பாதிக்கப்பட்ட...

கரையோரங்களில் வசிக்கும் மக்களை உயர மான பகுதிகளுக்கு செல்லுமாறும் எச்ச ரிக்கை விடுத்துள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ திணைக்களம் தெரிவித் துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதே விமான நிலையத்துக்கு வரும் விமானங்கள் சிறிய விமான நிலையத்துக்கு திருப்பி விடப்பட்டன, மேலும் சில முக்கிய நெடுஞ்சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)

## விமர்சிப்பது...

ஆதரவளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதேச அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லும் திட்டம் எந்தவொரு அரசியல் கட்சியிடமும் இல்லை. அத்தகைய திட்டம் இருந்தால் அதனை முன்வைக்குமாறும், இல்லை என்றால் நாட்டின் எதிர்காலத்துக்காக பொருளாதார பரிமாற்ற சட்டத்துக்கு ஆதரவளிக்குமாறும் சகலரிடமும் ஜனாதிபதி கோரிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கனமழை குறித்து சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 03

**மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 150 மில்லி மீற்றருக்கும் அதிகளவான கனமழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இடியுடன் கூடிய மழை, தற்காலிக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய விபத்துக்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்தத் திணைக்களம், பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை, நேற்றுக் காலை 8. 30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையான காலப்பகுதியில் கிரிந்தி வெல பிரதேசத்தில் 152 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இதே காலப்பகுதியில் வரகாபொல பிரதேசத்தில் 138.5 மில்லி மீற்றர் மழையும், வத்துபிட்டிவல பிரதேசத்தில் 122.5 மில்லி மீற்றர் மழையும், அவிசாவளை பகுதியில் 98.5 மில்லி மீற்றர் மழையும், இரத்தினபுரி பிரதேசத்தில் 96.2 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது.

## வீதியில் முறிந்து வீழ்ந்த மரம் போக்குவரத்துக்குப் பாதிப்பு



கொழும்பு, ஜூன் 03

சீரற்ற வானிலையால் கொழும்பு - கண்டி வீதியில் வறக்காப்பொல, நவதல பகுதியில் பாரிய மரமொன்று முறிந்து வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மரத்தை வெட்டி அகற்றும் பணியில் உரிய தரப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மழையுடனான சீரற்ற வானிலையால் பல அனர்த்தங்கள் ஏற்பட்டுவருவதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இதனால் பொதுமக்களைப் பாதுகாப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

## 10 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்!

கொழும்பு, ஜூன் 03

நாட்டில் நிலவும் மோசமான வானிலையால் பத்து மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தின் பாதுக்கை பிரதேச செயலகப் பிரிவுக்கும், களுத்துறை மாவட்டம் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் சிவப்பு மண்சரிவு எச்சரிக்கை அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கண்டி, நுவரெலியா, இரத்தினபுரி, காலி, கேகாலை, அம்பாந்தோட்டை, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலுள்ள 41 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

## மரத்திலிருந்து வாவிக்குள் குதித்தவர் நீரில் மூழ்கி பலி

குருநாகல், ஜூன் 03

குருநாகல், பொல்பித்திகம பகுதியில் மரமொன்றிலிருந்து வாவிக்குள் குதித்தவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொல்பித்திகம பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகல், பொல்பித்திகம, கிரிப்பமுனேகம பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், நண்பர்களுடன் இணைந்து பொல்பித்திகம புதிய வாவிக்கு நீராடச் சென்ற நிலையில் இவர் வாவிக்கு அருகிலிருந்த மரமொன்றின் கிளையில் ஏறி நின்று வாவியில் குதித்ததன் பின்னர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் குருநாகல் மருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொல்பித்திகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## தொழில்முனைவோருக்கு கடன் வழங்க அரசு முடிவு

கொழும்பு, ஜூன் 03

கிராமப்புற தொழில்முனைவோருக்கு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஐந்து இலட்சம் கிராமப்புற பெண் தொழில்முனைவோர் உருவாக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிதாக தொழில் தொடங்க விருப்பம் உள்ளவர்களுக்கு இந்தக் கடன் வசதி மூலம் வாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## 30, 000 மெற்றிக் தொன் மிளகு 2023இல் அறுவடை

கொழும்பு, ஜூன் 03

இலங்கையில் கடந்த வருடம் மிளகு அறுவடை 30 ஆயிரம் மெற்றிக் தொன்களைத் தாண்டியதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மிளகுச் செய்கைக்கான புதிய தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டமை, மானியங்களை வழங்குதல் மற்றும் கடந்த வருடத்தின் தொடர் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக 2019 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் அதிகளவு மிளகுப் பயிர்ச் செய்கை 2023 ஆம் ஆண்டில் பதிவாகியுள்ளதாக அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ)

## மரம் விழுந்து ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூன் 03

இரத்தினபுரி, கிரியெல்ல பகுதியில் மரம் முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

மழையுடனான வானிலையால் பல பகுதிகளில் அனர்த்தங்கள் ஏற்படுவதால் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று காலை வரையான 24 மணி நேரத்தில் அனர்த்தங்களால் ஐவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில் பணிப்பாளரின் விடுதியில் குளவிகள் கொட்டி ஊழியர்கள் பாதிப்பு

வவுனியா, ஜூன் 03

வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளரின் விடுதியைச் சுத்தம் செய்த விவசாயத் திணைக்கள ஊழியர்கள் இருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

வடக்கு விவசாயத் திணைக்களத்தில் தகுதியான உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால், வவுனியா பிரதி விவசாயப் பணிப்பாளராக ஓய்வுபெற்ற ஒருவரை வடக்கு விவசாயத் திணைக்களம் கடந்த ஜனவரியில் நியமித்தது. இருந்தாலும், அந்த நியமனத்துக்கு பொதுச்சேவைகள் ஆணைக்குழு இதுவரை அங்கீகாரம் வழங்கவில்லை. இருப்பினும், அவருக்கு சம்பளம், விடுதி வசதி வழங்கப்பட்டு கடமை புரிந்து வருகிறார்.

இந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் வவுனியாவுள்ள பிரதி விவசாயப் பணிப்பாளரின் விடுதியைத் துப்புரவு செய்வதற்காக, அலுவலக நேரத்தில் 2 விவசாயத் திணைக்கள ஊழியர்களை அழைத்துச் சென்றதாகவும், அவர்களே குளவிக்கொட்டுக்கு இலக்கானதாகவும் தெரியவருகிறது. (எ)

## கர்ப்பவதிகள் ஹெலியில் மீட்பு

கொழும்பு, ஜூன் 03

காலி - நெலுவ மருத்துவமனைக்கு செல்லும் வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும், அந்த மருத்துவமனையிலுள்ள கர்ப்பவதிகள் மற்றும் அவசர நோயாளிகள் அனைவரும் ஹெலிகொப்டர்கள் மூலம் உடுகம மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக காலி மாவட்ட சமூக சுகாதார மருத்துவ அதிகாரி அமில சந்திரசிறி தெரிவித்தார்.


நெலுவ மருத்துவமனைக்கு அம்புலன்ஸில் செல்ல முடியாத காரணத்தால் தாய்மார்கள் மற்றும் நோயாளிகள் ஹெலிகொப்டரில் அழைத்து வரப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, கடும் மழையுடன் கூடிய காலநிலை தொடரும் நிலையில் ஜிங்கங்கை பெருக்கெடுத்துள்ளதால் தவலம பிரதேசத்தில் இருவர் காணாமல் போயுள்ளதாக காலி மாவட்ட பதில் மாவட்ட ஆணையாளர் சாமி ராஜகருணா தெரிவித்தார்.

தவலம, நெலுவ, உடுகம, ஹினிதும முதலான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்றுவதற்காக இராணுவம் மற்றும் கடற்படையின் நிவாரண சேவைக் குழுவினர், படகுகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களுடன் அந்தப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி, நிவாரணப் பணிக்குழுவினர் வெள்ளம் சூழ்ந்த பகுதிகளுக்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

## கொழும்பு - கண்டி பிரதான வீதி போக்குவரத்து முற்றாக பாதிப்பு



கொழும்பு, ஜூன் 02

கொழும்பு - கண்டி பிரதான வீதியின் போக்குவரத்து வரக்காபொல பிரதேசத்தில் இருந்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரதான வீதியில் மரம் முறிந்து வீழ்ந்தமையால் இவ்வாறு அந்த வீதியூடான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, கொழும்பு - கண்டி வீதியைப் பயன்படுத்தும் சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.